பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 09 வியாழக்கிழமை 22.04.2021 கதிர் 168

**இனி இது ரகசியம் அல்ல!**

நாட்டைக் குழப்புவோர் என்று பலராலும் அவ்வப்போது குற்றம் சுமத்தப்படும் எங்களைப் போன்ற பிரகிருதிகள் எங்கள் பதவி நிலைக்கு பல நாமங்களைக் கொண்டிருக்கின்றோம். ஊடக வியலாளர், பத்திரிகையாளர், செய்தியாளர், பக்கம்02 »

## அதிகரிக்கும் கொரோனாத் தொற்று நேற்று மட்டும் 578 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்று மாத்திரம் 578 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரையில் 98 ஆயிரத்து 50 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 93 ஆயிரத்து 668 பேர் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, 3 ஆயிரத்து 752 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## மேலும் ஐவர் மரணம்; கொரோனா காவு 630

இலங்கையில் மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு வடக்கைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும், களனியைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவரும், இரத்தினபுரியைச் சேர்ந்த 66 வயதுடைய ஆண் ஒருவரும், கம்பஹாவைச் சேர்ந்த 39 ☞2

# கதிர்வீச்சுப் பொருள்களுடன் அம்பாந்தோட்டையில் கப்பல்



## சீனா செல்லும் வழியில் நுழைந்ததால் பரபரப்பு

(ந.லோகதயாளன்)

கொழும்பு, ஏப்ரல் 22

கதிர்வீச்சு வலிமை கொண்ட பொருள்களுடன் சீனா நோக்கிச் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைந்தமையை அடுத்து கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது.

அந்தக் கப்பலை உடனடியாகத் துறைமுகத்தை விட்டு வெளியேறுமாறு இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை கட்டளையிட்டமையை அடுத்து, கப்பல் துறைமுகத்துக்கு வெளியே அனுப்பட்டது. ☞2

## தமிழரசு மத்தியகுழு மீண்டும் மே1 இல் திருமலையில் கூடும்

திருகோணமலை,ஏப்.22

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு வரும் மே முதலாம் திகதி திருகோணமலையில் கூடுகின்றது.

நேற்றிரவு திருகோணமலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வைத்து தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும், பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கமும் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

திருகோணமலை, அன்புவழிபுரம் சிவில் சமூகத்தினருக்கும் தமிழரசுக்கட்சித் தலைவர் மற்றும் பொதுச் ☞2

## அம்பாந்தோட்டைக்குள் நுழைந்த கப்பல் நாடாளுமன்றத்தில் சஜித் நேற்று கேள்வி



அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வேதியல் அணு மூலக்கூறுகளுடன் சர்வதேசக் கப்பல் ஒன்று வந்துள்ளமை உண்மையா? குறித்த நாட்டின் தூதரகத்தின் வலுயுறுத்தலுக்கு கட்டுப்பட்டு அரசு இதனைக் கண்டுகொள்ளாது மௌனம் காக்கின்றதா? இது உண்மையென்றால் நாட்டின் நிலைமை என்னவாகும் எனத் தெரியுமா?

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

அதேபோல் ☞2

## யாழ்.பொலிஸார் 11 பேர் உட்பட வடக்கில் மேலும் 21 பேர் கொரோனாவால் பாதிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் 11 பேர் உட்பட வடக்கில் மேலும் 21 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

### கொரோனாவின் மீள் தாண்டவத்தையடுத்து

## கடுமையான நடவடிக்கைகளை எடுக்க சுகாதார அமைச்சு முடிவு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் 3 ஆவது அலை தாக்கும் அபாயம் உள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், இதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சுகாதார ☞11

## தமிழ்த் தேசிய இனத்துக்கு மறுக்கும் அதிகாரங்களை துறைமுக நகரம் மூலம் வெளிநாட்டுக்கு வழங்குவதா?

### ரெலோ பேச்சாளர் சுரேந்திரன் கேள்வி

துறைமுக நகர முகாமைத்துவத்திற்கான ஆணைக்குழுவை அமைப்பதற்கான சிறப்பு சட்ட மூலத்திற்குரிய பிரேரணையை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறது. இந்த ஆணைக் குழுவின் முலம் வெளிநாட்டு பிரதிநிதிகளை ஆணையாளராக நியமிப்பதற்கும், காணி மற்றும் நிதி அதிகாரங்களும் அதற்கு வழங்கப்படும் அபாயம் இருப்பதாகவும் எதிர்க்கட்சியினரும் ஆளுங்கட்சியின் கணிசமான உறுப்பினர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். ☞11

## பம்பைமடுவில் 13 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியா, பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் உள்ள 13 பேருக்கு நேற்றிரவு கொரோனா வைரஸ் தொற்று ☞2



## மணல் கடத்தலில் ஈடுபட்ட டிரக்டர் மீது இராணுவம் நேற்றிரவு துப்பாக்கிச்சூடு

### கொடிகாமத்தில் சம்பவம்; மூவர் தப்பியோட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட டிரக்டர் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு கொடிகாமம், பாலாவி காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. ☞11



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சஞ்சிகையாளர் என்று இந்தத் திருநாமங்கள் பலப் பல.

எந்த வடித்தில் இந்தப் பதவிக்கு வந்தாலும், அப்படி வருவோரிடம் நான் ஒரு கேள்வி கேட்பதுண்டு.

*'உங்கள் வேலை யாது? ஊர்ப் பாஷையில் ஒரு வரியில் விடை கூறுங்கள்!'* – என்பேன். பெரும்பாலும் பதில் வராது. நானே பதிலையும் கூறுவேன். என்ன பதில் தெரியுமா?

*"அடுத்த வீட்டு வேலியால் எட்டிப் பார்ப்பது!"* – இதுதான் செய்தியாளரின் பிரதான பணி என்பேன்.

இன்னொரு தரப்புக்குள் – நமக்கு சம்பந்தப்படாத பக்கத்திலும் – நடக்கும் விடயங்களைத் திரட்டிக் கொடுப்பதுதானே செய்தியாளனின் வேலை...!

இப்படிச் செயற்படுவதற்கு – செய்தியாளனாக வெற்றிகரமாக இயங்குவதற்கு ஒரு பண்பியல்பு வேணும். அதனை News Nose (செய்தி மூக்கு) என்பார்கள். எந்தச் செய்தியையும் நுகர்ந்தறியும் நுட்பத்துக்கு அது அவசியம்.

சாதாரண ஒருவனுக்கு சராசரியாகப் படும் ஒரு காட்சி செய்திளாளனுக்கு வேறு மாதிரிப்படும். அதற்குள் ஒரு தேடுதலை அவன் ஆரம்பித்தால் ஏதோ ஒன்று புதிதாக – வாசகர்களுடன் பகிரக்கூடியதாக – சிக்கும்.

நேற்று எனக்கு ஓர் அழைப்பிதழ் தபால் அஞ்சலில் வந்தது. வெளியில் – உறையில் – நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயர் றப்பர் ஸ்டாம்ப் மூலம் பொறிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற முத்திரை ஒட்டப்பட்டிருந்தது.

இந்த நாடாளுமன்ற முத்திரை விவகாரம் குறித்து சில வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கக் கூடும்

தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்களுக்கு இந்த முத்திரை தாராளமாக வழங்கப்படும். அவர்கள் அவற்றை தபால் தலையாக ஒட்டி அஞ்சலுக்குப் பயன்படுத்தலாம். அதாவது அவர்கள் தபால் சேவையை இலவசமாகப் பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் ஒரு முறைமை இது. ஆனால் அப்படி நாடாளுமன்றத்தினால் எம்.பிக்களுக்கு வழங்கப்படும் நாடாளுமன்ற முத்திரையைத் தபால் தலையாகப் பயன்படுத்தி ஒரு கடிதத்தை அஞ்சல் செய்வதாயின் அதில் அனுப்புபவர் ஓர் எம்.பியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

பெரும்பாலும் கட்சிகள் தமது அரசியல் செயற்பாடுகளுக்கான தபால்களுக்குத் தத்தமது கட்சி எம்.பிக்களின் பெயரையும், அவர்களுக்கு வழங்கப்படும் நாடாளுமன்ற முத்திரையையும் தாராளமாகப் பயன்படுத்துவது வழமை.

இப்போது நாடாளுமன்றத்தில் எம்.பிக்களைக் கொண்டிராத ஐக்கிய தேசியக் கட்சி இப்போதும் இந்த இலவச தபால் சேவையைப் பயன்படுத்துகின்றது, தபாலை அனுப்புவர் இடத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் பெயரை அது பயன்படுத்துகின்றது என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

இனி விடயத்துக்கு வருகிறேன். நேற்று எனக்கு ஓர் அழைப்பிதழ் தபாலில் கிடைத்ததல்வா?

அதில் என் முகவரியை எழுதியவரின் கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயமானது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் அவர்கள். நீண்ட கால நண்பர். தமிழரசுடன் தன் வாழ்வைக் கரைத்தவர்.

எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் தந்தை செல்வாவின் அஞ்சலியும் நினைவுப் பேருரையும் பற்றிய அழைப்பு அது. இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா எனக்கும் தவறாது அழைப்பு அனுப்பும்படி பணித்ததின் பேரில் எனக்கு அந்த அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் அறிந்தேன். (தனிப்பட்ட காழ்ப்புணர்வுகள் தாண்டிய அரசியல்வாதி மாவை சேனாதிராசாவின் பண்பு இது என்பதை உணர்த்தவே இதைக் குறிப்பிட்டேன்). அதுவும் அல்ல விடயம்.

தந்தை செல்வா நினைவு அறக்கட்டளை இந்த நிகழ்வை நடத்தினாலும், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவின் வழிகாட்டலில் தமிழரசுக் கட்சி நடத்தும் நிகழ்வே இது.

தமிழரசுக் கட்சி நடத்துவதால் கட்சி எம்.பியின் பெயரில், இலவச நாடாளுமன்ற முத்திரையுடன் அழைப்பிதழ் வந்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால் அதில் 'ஸ்டாம்ப்' குத்தியிருந்த எம்.பியின் பெயரைப் பார்த்த போதுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

தமிழ் மாவட்டங்கள் முழுவதிலுமே தமிழரசுக்கு எம்.பிக்கள் உள்ளனர். அம்பாறையில் – கலையரசன்; மட்டக்களப்பில் – சாணக்கியன்; திருகோணமலையில் – சம்பந்தன்; வன்னியில் – சாள்ஸ் நிமலநாதன். யாழ்ப்பாணத்தில் (கிளிநொச்சி உட்பட) – சிறிதரன், சுமந்திரன்.

அந்தந்த மாவட்டங்களில் கட்சி அந்தந்த எம்.பிக்களின் பெயரில் றப்பர் ஸ்டாம்புகளையும் நாடாளுமன்ற முத்திரைகளையும் பயன்படுத்துவதுதானோ முறை...!

எனக்குக் கிடைத்த தபாலின் உறையில் நாடாளுமன்ற முத்திரையுடன், றப்பர் ஸ்டாம்பில் 'இ.சாள்ஸ் நிர்மலநாதன், பாராளுமன்ற உறுப்பினர், வன்னித் தேர்தல் மாவட்டம்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் ஒரு சட்டத்தவறும் இல்லை.

ஆனால், தமிழரசுக் கட்சியின் தலைமைப் பணிமனை யாழ்ப்பாணத்தில் உள்ளது. அங்கிருந்துதான் இந்தத் தபால்கள் அனுப்பப்படுகின்றன. அந்த மாவட்டத்திலேயே இரண்டு எம்.பிக்களை வைத்திருக்கும் தமிழரசு அவர்களைத் தவிர்த்துவிட்டு, ஏன் வன்னியிலிருக்கும் எம்.பியின் பெயரைப்பயன்படுத்துகின்றது என்று என் செய்தி மூக்குத் தேடியது. அப்போதுதான் விடயம் விளங்கியது.

அது, மேலிடத்து ஓடராம் – யாழ். மாவட்ட எம்.பிக்களின் பெயர்களைப் பயன்படுத்தக்கூடாது என்பது.

மாதத்துக்கு ஆயிரக் கணக்கான கடிதங்கள் இப்படி கட்சியால் அஞ்சல் செய்யப் படுகின்றன. அந்த இருவரின் பெயர்களும் பயன்படுத்தப்பட்டால், அவர்களே கட்சியில் active ஆக இயங்குகின்றார்கள் என்ற கருத்து மக்களுக்கு வந்துவிடுமாம். அப்படி வந்தால் எம்.பி. பதவிகளைக் கோட்டை விட்டோருக்கும், அவர்களைச் சூழ்ந்து நிற்போருக்கும் பெரும் அரசியல் பின்னடைவாம். இப்படி கணக்குப் போட்டியிருக்கின்றது தமிழரசு நிர்வாகம். அதனால் யாழ்ப்பாணத்தில் அரசியல் செல்வாக்கை ஈட்டினாலும் அதனால் தமக்கு நெருக்கடி தர முடியாத வன்னி எம்.பியின் பெயரைப்படுத்துகின்றார்களாம் கட்சியின் தலைமை நிர்வாகிகள்...!

ஏதோ ஒரு படத்தில் கூறியடி 'இப்படி எல்லாம் 'பிளான்' பண்ணுவதற்கு வாடகைக்கு ரூம் போட்டுத்தான் ஆலோசிப்பார்களோ?' தெரியவில்லை.

அரசியல் எப்படி, எப்படி எல்லாம் சிந்திக்க வைக்கின்றது பாருங்கள்...!

– மின்னல் –

---

## யாழ்.பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 788 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது 21 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 11 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள். பொலிஸ் நிலையத்தில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட உத்தியோகத்தர்களுடன் நெருங்கிய தொடர்புடைய அனைவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற இருவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் தலா ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

மன்னார் மாவட்டத்தில் 5 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் மன்னார் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குக் கொரோனா அறிகுறிகளுடன் சென்றவர்கள். ஒருவர் வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்றவர்.

மல்லாவி வைத்தியசாலைக்குச் சென்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை துறைமுக நகருக்கு கற்கை விஜயம் மேற்கொள்ள வருமாறு சீனத் தூதரகத்தால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பு குறித்தும் எதிர்க்கட்சியினர் சீற்றத்துடன் கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்துள்ள கப்பல் குறித்து வெளிவரும் செய்தி தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சமூக வலைத்தளங்களில் செய்தி ஒன்று பகிரப்பட்டு வருகின்றது. நேற்று (நேற்றுமுன்தினம்) 20ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு சர்வதேச கப்பல் ஒன்று வேதியல் அணு மூலக்கூறுகளுடன் உள்நுழைந்துள்ளது. இதனை இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினர் கண்டறிந்துள்ளனர். இது உண்மையான செய்தி என்று நாம் நம்புகின்றோம், அது தவறான செய்தி சென்றால் அது குறித்து அரசாங்கம் அறிவிக்க முடியும். ஆனால் இலங்கை கடற்படைக்குக் கூட இந்தக் கப்பலைப் பரிசோதனை செய்ய அனுமதி வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

துறைமுகத்தில் இருந்து இந்தக் கப்பலை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை வலியுறுத்தியுள்ளது. ஆனால், இப்போது வரையிலும் இந்த விடயத்தில் அரசு மௌனக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. ஒரு வெளி நாட்டு தூதரகத்தின் வலியுறுத்தலுக்குக் கட்டுப்பட்டே அரசு இவ்வாறு செயற்பட்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது. எனவே, இந்தச் செய்தியின் உண்மைத் தன்மையை நன்கு ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேதியல் அணு மூலக்கூறுககள் எமது நாட்டுக்குள் கொண்டுவருவது என்பது பாரிய அச்சுறுத்தலாகும். எனவே, அரசு உடனடியாக இதனை ஆராய்ந்து உண்மை – பொய்த் தன்மைகளை ஆராய்ந்து உண்மையென்றால் உடனடியாக கப்பலை வெளியேற்ற வேண்டும் அல்லது இலங்கைக் கடற்படையைக் கொண்டு ஆராய அனுமதிக்க வேண்டும் – என்றார்.

அதேபோல் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி சீனத் தூதரக அறிவித்தல் தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத்தில் இருந்து எமது தொலைபேசிக்கு குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதனை உங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

கொழும்புத் துறைமுக நகர் கற்கை விஜயம் ஒன்றை சீனத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது எனவும், நாளைமறுதினம் (நாளை) வெள்ளிக்கிழமை இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் குறித்த குறுந்தகவலில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் எமது ஆட்சியிலும் இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட போதும் நகர அபிவிருத்தி அதிகார சபையே ஏற்பாடு செய்திருந்தது. ஆனால், எமது நாட்டின் நிலப்பரப்பில் நாம் விஜயம் செய்ய சீனத் தூதரகம் எவ்வாறு ஏற்பாடுகள் செய்ய முடியும்? – என்று கேள்வி எழுப்பினார்.

இதனை அப்படியே கைவிடுமாறு அமைச்சர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவித்த வேளையில், குறித்த குறுஞ்செய்தி தொடர்பில் தான் ஆராய்ந்து பார்ப்பார் என்று சபாநாயகர் அறிவித்தார்.

---

## மேலும் ஐவர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்கள் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 630ஆக உயர்ந்துள்ளது.

## தமிழரசு மத்தியகுழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றிரவு எட்டு மணிமுதல் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது.

அப்போது அந்நிகழ்வில் பங்குபற்றிய திருகோணமலையைத் தமிழரசுப் பிரமுகர்கள் பலரும் திருகோணமலையில் துடிப்புள்ள இளம் தலைமை ஒன்று தமிழரசுக் கட்சிக்கு இல்லாதமை தொடர்பான பின்னடைவை பெருங்குறையாக எடுத்துரைத்தனர்.

அப்போதே, எதிர்வரும் மே முதலாம் திகதி திருகோணமலையில் கட்சியின் மத்தியகுழு மீண்டும் கூடவிருக்கின்றது என்றும் –

அச்சமயம் இந்தப் பிரச்சினை குறித்தும் ஆராய்ந்து தாங்கள் முடிவு எடுத்து அறிவிப்பர் என்றும் –

மாவை சேனாதிராசாவும், மருத்துவர் சத்தியமூர்த்தியும் தெரிவித்தனர் என்றும் – அறியவந்தது.

---

## பம்பைமடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்படுபவர்கள் மற்றும் தென்பகுதிகளைச் சேர்ந்த பலர் பம்பைமடு தனிமைப் படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 7 பேருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அவர்களுடன் தொடர்புடைய மற்றும் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பலருக்குப் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு, யாழ். ஆய்வுகூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது 13 பேருக்குத் தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (100)

---

## கதிர்வீச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கதிர்வீச்சு வலிமை கொண்ட பொருள்கள் அடங்கிய பல கென்டெயினர்கள் (கொள்கலன்கள்) இந்தக் கப்பலில் உள்ளன.

'எம்.வி.பிபிஸி நேப்பிள்ஸ்' என்ற இந்தக் கப்பல் அன்டிகுவா அண்ட் பார்படோஸ் கொடியுடன் றொட்டடார்மில் இருந்து சீனாவுக்குச் சென்று கொண்டிருந்தது. நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் அது நுழைந்தது.

சில தொழில் நுட்பப் பிரச்சினைகளை அடுத்து அவற்றைத் திருத்துவதற்காக அவசர தேவை கருதி அது அம்பாந்தோட்டை முறைமுகத்துக்குள் நுழைந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கப்பலில் பல கொன்டேயினர்கள் உள்ளன என்று இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் தலைவர் ரி.எம்.ஆர். தென்னக்கோன் தெரிவித்தார்.

கப்பல் துறைமுகத்துக்குள் நுழைந்த போது அதில் இருந்த பொருள்கள் குறித்து அதிகாரிகளுக்கு விவரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்றார் அவர்.

அந்தக் கப்பலில் இருந்து எந்தப் பொருளையும் இறக்க அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

கப்பல் துறைமுகத்துக்கு வெளியே உடனே அகற்றப்பட்டு விட்டது என்றும், அதனால் இப்போது இலங்கைக்கு ஆபத்தோ, பாதிப்போ இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முழு விளக்கத் தகவல்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

"அவசர திருத்தப் பணிக்காக அந்தக் கப்பலின் உள்நாட்டு முகவர் மூலம் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டதன் பேரில் கப்பல் துறைமுகத்துக்குள் அனுமதிக்கப்பட்டது. அச்சமயம் கப்பலில் இருக்கும் பொருள்களின் பட்டியல், விவரம் சம்பந்தப்பட்ட முகவரினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை." – என்று இப்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்வகிக்கும் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குறூப் கம்பனி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை கடற்படையும், துறைமுக அதிகாரி சபையும் முன்னெடுத்த விசாரணைகளின் பிரகாரம் கப்பலில் யுரேனியம ஹெக்ஸாபுளோரைட் இருப்பது தெரிய வந்தது. அதனையடுத்தே கப்பலை உடனடியாகத் துறைமுகத்திலிருந்து வெளியேறும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் அறியவந்தது.

இந்தக் கப்பலில் இருந்து எந்தப் பொருளும் அம்பாந்தோட்டையில் இறக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மைப் பலத்தை அரசு தவறாகப் பயன்படுத்தக்கூடாது

## கரு ஜயசூரிய 'அட்வைஸ்'



கொழும்பு, ஏப்.22

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலங்கள் நிறைவேற்றப்படக்கூடாது என்று சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் ஆராய்வதற்கு போதியளவு காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

அரசாங்கத்தால்சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

இது தொடர்பாகக் கருஜயசூரிய அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார். அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

சில சட்டமூலங்கள் தொடர்பில் வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் ஆராயப்படவுள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி தேசிய ரீதியில் மிகவும் முக்கியமான சட்டமூலங்கள் மற்றும் யோசனைகள் நிறைவேற்றப்படுகின்றமை தவிர்க்கப்பட வேண்டும்.

கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் போதியளவு கால அவகாசத்தை வழங்குவது முக்கியமானதாகும்.

அதேபோன்று மறுபுறம் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதென்பது நீதித்துறையைக் குறைமதிப்பீடு செய்வதற்கு வழி வகுக்கும். இவற்றுக்கு மத்தியில் ஓர் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி என்றவகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெளிவுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# நாட்டில் இருவேறு சம்பவங்களில் பெண் உட்பட இருவர் கொலை

நாட்டின் இரு வேறு பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோதல்களின் போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிரிகந்துருவத்த பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்கம பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவத்தின் பின்னர் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளமையுடன், அவர்களைக் கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குடா பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். குடும்பத் தகராறு காரணமாகவே மோதல் ஏற்பட்டுள்ளது என பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஆலங்குடா பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளமையுடன், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், மேற்படி சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கைதியைப் பார்வையிடுவதற்கு சிறைக்குச் சென்ற பெண் கைது

நீர்கொழும்புசிறைச்சாலைக்குத்தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்து வந்தார் எனப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவரை பார்வையிடுவதற்காக செவ்வாய்க்கிழமை மாலை வந்திருந்த பெண்ணொருவரை சோதனைக்குட்படுத்தியுள்ள சிறைச்சாலை அதிகாரிகள் அவரிடமிருந்து தடை செய்யப்பட்ட பல பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது, குறித்த பெண்ணால் எடுத்துவரப்பட்ட காற்சட்டை ஒன்றை சோதனைக்குட்படுத்திய அதிகாரிகள், அதில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த, 4 போதைப் பொருள் பக்கெற்றுகளையும், சிம் அட்டை ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, திம்பிரிகஸ்கடுவ பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளுக்காக அவர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கொரோனா அதிகரிப்பு அச்சம்கொள்ள வேண்டாம்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண கூறுகின்றார்



புத்தாண்டின் பின்னர் நாட்டில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது. எனினும் மக்கள் இது தொடர்பில் வீண் அச்சமடையத் தேவையில்லை. நிலைமை தீவிரமடையும் பட்சத்தில் சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளுக்கு அமைய தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது என்று அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

புத்தாண்டின் பின்னர் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது. இது தொடர்பில் சுகாதாரத் தரப்பு மற்றும் கொவிட் தடுப்பிற்கான தேசிய செயலணி உள்ளிட்டவற்றால் ஏற்கனவே மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதன் போது சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், துரதிஷ்டவசமாக மக்கள் அதன்படி செயற்படாதமையை அவதானிக்க முடிந்தது.

எவ்வாறிருப்பினும் மக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை. நாட்டில் முதலாம், இரண்டாம் அலை ஏற்பட்ட போது சில நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும், சுகாதார அமைச்சு உள்ளிட்ட சகலரும் ஒன்றிணைந்து அதனை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியமையால் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்கக் கூடியதாக இருந்தது. எனவே வீண் அச்சமடையத் தேவையில்லை.

சுகாதார அமைச்சும், அரசாங்கமும் இது தொடர்பில் மிக அவதானத்துடன் உள்ளது. இந்த நிலைமையை மேலும் தீவிரமடையாமல் அரசாங்கத்தால் தடுக்க முடியும். கொவிட் பரவல் அதிகமாகக் காணப்பட்ட கொழும்பு மற்றும் கம்பஹா உள்ளிட்ட மாவட்டங்களில் இது வரையில் சுமார் 10 லட்சம் பேருக்கு கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்.

எதிர்பாராதவிதமாக வைரஸ் தொற்று தீவிரமடைந்தால் சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைய உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தயாராகவுள்ளது.– என்றார்.

# பொருள்களின் இறக்குமதியைத் தடை செய்து மாபியாக்களை உருவாக்கியுள்ளது அரசாங்கம்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் கருத்து



பல பொருள்களுக்கான இறக்குமதியைத் தடை செய்துள்ளதன் மூலம் அமைச்சர்களும் அவர்களுக்குநெருக்கமானமாபியாகாரர்களும் கொள்ளை இலாபம் அடிக்க அரசு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான 5 ஒழுங்கு விதிகள் மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில் –

உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பது என்ற பெயரில் பல பொருள்களின் வெளிநாட்டு இறக்குமதியை அரசு தடை செய்துள்ளது.

ஆனால் இதன் மூலம் மக்களுக்கு மேலும் சுமையே ஏற்றப்பட்டுள்ளது. பல பொருள்களை சந்தையில் பல நாள்களுக்கு காணமுடியாதிருக்கும்.

திடீரென அதிகரித்த விலையுடன் அவை சந்தைக்கு வரும். பின்னர் மீண்டும் காணாமல் போய் சில கால்த்துக்குப் பின்னர் மீண்டும் அதிகரித்த விலையுடன் சந்தைக்கு வரும். இது ஒரு வியாபார தந்திரமாகவே முன்னெடுக்கப்படுகின்றது.

பல பொருள்களுக்கான இறக்குமதியைத் தடை செய்துள்ளதன் மூலம் அமைச்சர்களும் அவர்களுக்கு நெருக்கமான மாபியாக்களும் கொள்ளை இலாபம் அடிக்க அரசு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த இறக்குமதித் தடையால் உள்ளூர் உற்பத்திகள் அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட பொருள்களை பலமடங்கு அதிகரித்த விலையில் விற்கும் வியாபாரமே இடம்பெறுகின்றது. – என்றார்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் கடல் வளம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் கடல் வளம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

எதிர்காலத்தில் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

தலைமன்னார், பேசாலை, சிறுத்தோப்பு போன்ற மீனவ கிராமங்களில் இருந்து மீன் பிடிக்க கடலுக்குச் செல்லும் மீனவர்கள் பலர் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று வரை விடுவிக்கப்படவும் இல்லை. விடுவிக்கப்பட்ட சில மீனவர்கள் நாட்டுக்குத் திரும்ப முடியாத நிலையிலும் உள்ளனர்.

தற்போது மன்னாரில் இருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர்களைக் கடலில் வைத்து கடற்படையினர் தாக்கித் துன்புறுத்திய சம்பவங்கள் உள்ளன. இதனால் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொடர்பாகவும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் தொடர்பாகவும் கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் உள்ளமை வேதனையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, வடக்கு மீனவர்கள் தொடர்பாகவும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வடக்கிலிருந்து நியாயக்குரல்!

**ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தோரின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை நாடு நேற்று அனுஷ்டித்தது.**

**வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற வேறுபாடின்றி இந்த நினைவு நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றமை குறிப்பிடத் தக்க விடயம்.**

**இந்தத் தாக்குதல் தெற்கிலும், கிழக்கிலும்தான் நடத்தப்பட்டது. குறிப்பாக கிறிஸ்தவ தேவாலயங்களை இலக்கு வைத்துத்தான் அத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.**

**ஆனால் வடக்கிலும் – இந்து ஆலயங்களிலும், முஸ்லிம்களின் பள்ளிவாசல்களும், பௌத்தர்களின் விகாரைகளிலும் கூட – எந்த வேறுபாடுகளுமின்றி நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக நடை பெற்றன.**

**இழப்பிலும் ஆற்றுப்படுத்தல் என்ற உன்னத நடவடிக்கையில் நாடு ஒன்றுபட்டு நின்றமை வரவேற்கத்தக்க விடயம்.**

**இந்த விடயத்தை ஒட்டி வடக்கிலிருந்து எழுந்த ஒரு நியாயக் குரல் தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தின் காதில் விழவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.**

**ஆட்சிப் பீடத்தினரின் காதுகளில் மட்டுமல்ல, பௌத்த, சிங்கள இனவெறிப் போக்குடன் செயற்படும் பேரினவாதிகள், தத்தம் மதங்கள் பற்றி மாத்திரம் குரல் எழுப்பும் தென்னிலங்கை மதத் தலைவர்களின் காதுகளிலும் கூட அந்தக் கோரிக்கை விழ வேண்டும்.**

**அந்தக் கோரிக்கையை முன்வைத்திருப்பவர் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார்.**

***"எங்களுடைய நாட்டில் 30 ஆண்டுகளாக நடைபெற்ற போரின் போது வடக்கில் எத்தனையோ ஆலயங்களை குண்டு வீசித் தாக்கப்பட்டன. எத்தனையோ மக்கள் இறந்தார்கள். ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். இந்த வேளையில் தென்பகுதியில் இருந்து யாரும் எங்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை."*** **– என்று விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர்.**

**இவ்விடயத்தில் ஒட்டுமொத்த தமிழினத்தின் கருத்தை பிரதிபலித்திருக்கின்றார் யாழ். குரு முதல்வர்.**

**தென்பகுதியில் இருந்து யாரும் எங்களுக்காகக் குரல் எழுப்பவில்லை என்ற அவரின் ஆதங்கத்தினுள், இன்று ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசியல்வாதிகள் போல் தினசரி மாற்றி, மாற்றி கருத்துக்களைக் கூறித் தொடர்ந்து குரல் எழுப்பி வரும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் கூட அடங்குவார் என்பதும் மறுக்கக் கூடியதல்ல.**

**தமிழினம் கொன்றொழிக்கப்பட்ட போது அதைப் பார்த்து, சகித்து, அனுமதித்திருந்த மதத் தலைவர்களில் அவரும் கூட அடங்குவார் என்பதை மறுப்பதற்கில்லை. எங்களுக்காக யாரும் குரல் எழுப்பவில்லை என்ற ஆதங்கத்தை வெளியிட்ட யாழ். குரு முதல்வர், ஆனால், அதற்காக நாங்களும் அப்படி நடக்கக் கூடாது என்ற நீதியை எடுத்துரைத்து தமிழர்களின் நியாயப்போக்கையும் எடுத்தியம்பி நிற்கின்றார்.**

**எங்களுக்காக தென்னிலங்கையில் இருந்து குரல் எழாத போது தென்னிலங்கையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வுக்காக நாங்கள் ஏன் நினைவேந்தலை நடத்த வேண்டும் என்ற கேள்வி நியாயமாக எழுவதைச் சுட்டிக்காட்டும் குரு முதல்வர் அதற்கான சரியான பதிலை – விளக்கத்தை – இயேசு பிரானின் வார்த்தைகளிலேயே நமக்கு உரைக்கின்றார்.**

***"பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள்! – என்று ஆண்டவர் நமக்கு உபதேசிக்கின்றார்"*** **– எனச் சுட்டுகின்றார் குருமுதல்வர்.**

**தென்னிலங்கை எங்களுக்குக் குரல் எழுப்பத் தவறினாலும், நாங்கள் அவர்களுக்காக மன்றாடுவோம் என்று உயரிய பண்பியல்பை, எல்லாம் வல்ல ஆண்டவரின் திருவாக்கின் மூலம் நமக்கு எடுத்துரைத்து, அந்த வழியில் நியாயமாக செயற்பட வழிகாட்டும் குருமுதல்வர் அந்த அடிப்படையில் ஒரு நியாயமான கோரிக்கையையும் தென்னிலங்கை மக்களுக்கும், ஆட்சிப் பீடத்துக்கும் முன்வைக்கின்றார்.**

***"இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவுகூர்வதற்கு அனுமதி வழங்கி அதற்கான பாதுகாப்பை நீங்கள் கொடுக்கின்றீர்கள். அதற்கு நன்றி சொல்கின்றோம். இதேபோல தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் முப்பது ஆண்டுகள் அனுபவித்த போரின்போது இறந்து போன ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த எங்களுக்கு அனுமதி தர வேண்டும்."*** **– இதுவே அவர் முன்வைத்த நீதி, நியாயமான கோரிக்கை.**

**தென்னிலங்கை ஆட்சிப் பீடம் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியில் – மேலாதிக்க மமதையில் – மேலாண்மைத் திமிரில் – மூழ்கிக் கிடக்கின்றது.**

**அதன் காதுகளில் யாழ். குருமுதல்வரின் நியாயமான கோரிக்கை விழுமா என்பதே சந்தேகம்தான்.**

**வாழ்வியல் உரிமைகளுக்காக உயிரையும் ஈகம் செய்து போராடப் புறப்பட்ட தமிழினம் இன்று ஈகம் செய்யப்பட்ட தமது உறவுகளின் உயிர்களுக்கு நினைவேந்தல் செய்வதற்கு மன்றாட வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது.**

**இதுதான் நம் இனத்தின் பரிதாப நிலை!**

## 20 ஐ போன்று துறைமுக நகர் சட்ட மூலத்தையும் பெரும்பான்மையுடன் நிறைவேற்றியே தீருவோம்!

### கெஹலிய இறுமாப்பு

20 ஆவது அரசமைப்பு திருத்தத்தைப் போன்று கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தையும் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவோம். 20 இல் சில உறுப்புரைகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வசன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டமையால் அவற்றை நீக்கினோம். அதே முறைமை துறைமுக நகர சட்ட மூல விவகாரத்தில் பின்பற்றப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

சட்ட மூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டு 7 நாள்களுக்குள் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிப்பதற்கு நாட்டின் எந்தவொரு பிரஜைக்கும் உரிமை காணப்படுகிறது. அந்த நடைமுறையே தற்போது இடம் பெறுகிறது. இது சாதாரணமானதொரு விடயமாகும். சட்ட மூலமொன்று தயாரிக்கப் பட்டால் அதனை முதற்கட்டமாக அமைச்சரவையில் சமர்ப்பித்து, அனுமதி பெற்றுக் கொண்ட பின்னர் சட்டமூல திணைக்களத்திற்கும் பின்னர்



சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு வழங்கப்படும்.

இதன் போது குறித்த சட்ட மூலம் தொடர்பில் சட்டமா அதிபரிடம் அரசமைப்பிற்கு முரணானதா இல்லையா என்ற நிலைப்பாடு கோரப்படும். இந்த சட்ட மூலத்துக்கு சட்டமா அதிபரின் நிலைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. எனினும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சட்டமா அதிபரின் நிலைப்பாடு ஸ்திரமானதாகக் காணப்படாது. நீதிமன்ற செயற்பாடு இதிலிருந்து மாறுபட்டதாகும்.

நீதிமன்றத்தில் சட்ட மூலம் அரசமைப்பிற்கு முரணானதா இல்லையா என்பது தொடர்பாகத் தீர்மானிக்கப் படும். இதன் போது வழங்கப் படும் தீர்ப்பிற்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இது அரசமைப்புக்கு முரணானது, அல்லது இல்லை, சில உறுப்புரைகளை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும், அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் அல்லது சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்ல வேண்டும் என்று பலவாறு தீர்ப்புக்கள் வழங்கப்படக் கூடும்.

இதற்கு சிறந்த உதாரணம் 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஆகும். 20 இல் சில உறுப்புரைகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. எனவே அந்த உறுப்புரைகளை நீக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். நாட்டுக்கு மேலுமொரு சுமையை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதில் சிக்கல் இல்லை. எனினும் அதனை ஒரு சுமையாகவே நாம் பார்க்கின்றோம்.

இதே வழிமுறையையே துறைமுக நகர விவகாரத்திலும் நாம் பின்பற்றுகின்றோம். மாறாக, எதிர்த்தரப்பினர் கூறும் வகையில் இதில் எந்த விடயமும் மறைக்கப்பட வில்லை. அத்தோடு சீன காலனி என்ற ஒரு சொல் கூட இதில் உள்ளடக்கப்படவில்லை. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படும். – என்றார்.

## சாணக்கியன் ஏமாற்று அரசியல்வாதி இராதாகிருஷ்ணன் கடும் ஆதங்கம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை 'நீங்கள் ஒரு ஏமாற்று அரசியல்வாதி.' – என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் விமர்சித்துள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

மலையகமக்கள் முன்னணியின் இளைஞர் மாநாடு கடந்த 17 ஆம் திகதி நுவரெலியாவில் நடைபெற்றது. இம்மாநாட்டில் சிறப்பு அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோவும், சாணக்கியனும் பங்கேற்பார்கள் என ம.ம.மு. அறிவித்திருந்தது. எனினும், இருவருமே நிகழ்வில் பங்கேற்கவில்லை. இதன் பின்னணியில் அரசியல் அழுத்தம் இருக்கின்றது எனவும் தகவல் வெளி யாகியிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்றது. இதன்போது சபை வளாகத்தில் வைத்து இராதாகிருஷ்ணனை சந்திப்பதற்கு சாணக்கியன் சென்றுள்ளார் எனவும், இதன் போது ஏமாற்று அரசியல் வாதிகளுடன் தான் கதைப்பதில்லை எனக்கூறி இராதாகிருஷ்ணன் சீற்றத்துடன் சென்றார் எனவும் ம.ம.மு. வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது.

## சீன காலனித்துவத்தை கடுமையாக எதிர்ப்போம்

### அமைச்சர் மஹிந்த அமரவீரவும் போர்க்கொடி

விஜேயதாஸ ராஜபக்ஷ கூறுவதைப்போன்று இலங்கை சீனாவின் காலனித்துவ நாடாக மாறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன எனத் தெரியவில்லை.

எனினும் அத்தகைய நிலையொன்று ஏற்படுமாயின், நாம் அதனைக் கடுமையாக எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற சந்திப்பின்போது குறிப்பாக மாகாணசபைத்தேர்தல் தொடர்பில் எமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறியதுடன் இது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடுவதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

கொழும்புத் துறைமுகநகர விவகாரம் தொடர்பில் கட்சித்தலைவர்கள் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட வில்லை. இவ்விடயம் தொடர்பில் தற்போது உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப் பட்டதன் பின்னர், அதனடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். கொழும்பு துறைமுகநகர இடம் அரசாங்கத்தின் வசமாக வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

– ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கடனால் பாதிக்கப்பட்டோருக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

நுண்கடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் நிவாரணம் என்ன? அத்துடன் வடக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க கடந்த அரசாங்கம் மேற்கொண்டுவந்த திட்டத்தை அரசாங்கம் இல்லாமல் செய்திருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்கடந்த செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் கேள்வி நேரத்தில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கிலே நுண்கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

பெரும்பாலான நாடுகளில் இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றது. எமது நாட்டிலும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் இருக்கின்றன. அரச அங்கீகாரத்துடன் அந்த நிறுவனங்கள் செயற்பட வேண்டும் என்பதே அதன் நிபந்தனையாகும்.

என்றாலும் நாட்டில் பல நுண்கடன் நிறுவனங்கள் செயற்படுகின்றபோதும் அதுதொடர்பாக முறையாகக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பதால், அந்த நிறுவனங்களின் அதிகாரிகள் நினைத்த பிரகாரம் செயற்படுகின்றனர் என மக்கள் குற்றச்சாட்டுத்



தெரிவிக்கின்றனர்.

நுண்கடன் நிறுவனங்களுக்கு 35 வீத வட்டியே அறவிடமுடியும் என அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. சில நிறுவனங்கள் 100வீதம் தொடக்கம் 220வீதம் வரை வட்டி அறவிடுகின்றன.

இதனால் கிராமங்கள் உட்பட நகர மக்களும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். நுண்கடன் நிறுவனங்களால் கடன் பெற்றுக்கொண்டுள்ள மக்கள் அதனைச் செலுத்த முடியாமல் அசௌகரிய நிலைமைக்கு ஆளாகி இருக்கின்றனர்.

அதிகமானவர்கள் கடன் செலுத்த முடியாமல் தங்கள் குடும்பத்துடன் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர். குறிப்பாக இந்தக் கடன் தொல்லையில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது பெண்களாவர்.

இவ்வாறு கடன் பெற்றுக்கொண்டுள்ள பெண்கள் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இருக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களிலும் நுண்கடன் திட்டத்தால் வடக்கில் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருந்தபோது, அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆனால் அந்த நிவாரணத் திட்டத்தை அரசாங்கம் இல்லாமலாக்கி இருக்கின்றது. எனவே, நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அந்த சுமையில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும். – என்றார்.

# முல்லையில் தமிழர் நிலங்களை சூறையாடுவதற்கு முயற்சியாம்!

## கஜேந்திரன் எம்.பி. விசனம்




முல்லைத்தீவு, ஏப்.22

முல்லைத்தீவில் பல கிராம சேவையாளர் பிரிவுகளை மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குள் கொண்டு செல்வது முழுமையாகத் தமிழர்களிடமிருந்து நிலங்களை அபகரித்து, அதனை சிங்கள மயமாக்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே கருதுகிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலே கரைதுறைபற்று பிரதேச சபை பிரிவில் இருக்கக்கூடிய கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, செம்மலை ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய கிராம சேவையாளர் பிரிவுகளை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்குமாறு அரசாங்கத்தினுடைய உயர் மட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அழுத்தம் காரணமாக வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலகத்துக்கு அவசரமாக நேற்றையதினம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இவ்வாறான ஒரு செயற்பாடு நடைபெறப்போகிறது என்பதை அறிந்து வடக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பல பிரதிநிதிகள் தொடர்புகொண்டு அதனைச் செய்யவேண்டாம் என்றும் அது தொடர்பாக அமைச்சருடன் ஏற்கனவே பேசியிருக்கின்றோம்.

இந்த விடயம் தொடர்பாக ஒரு குழு ஒன்று அமைக்கப்பட்டு ஆராயப்பட்ட பின்னரே முடிவெடுக்கப்படும் என்று இணங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தும் கூட கொழும்பினுடைய அழுத்தம் காரணமாக அந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடானது முழுமையாகத் தமிழர்களிடமிருந்து அந்த நிலங்களை அபகரித்து அதனை முழுமையாக சிங்களமயமாக்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே கருதுகிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் ஆலயச் சூழலில் இறந்த கோழிக்குஞ்சுகள் விசிறல்



வவுனியா குடியிருப்பு பிள்ளையார் ஆலயத்தை அண்டிய பகுதியில் உயிரிழந்த கோழிக்குஞ்சுகளை வீசிச்சென்றுள்ளமையால் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பள்ளத்தில் உயிரிழந்த நிலையில் காணப்படும் நூற்றுக்கணக்கான கோழிக்குஞ்சுகளை விசமிகள் சிலர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை எறிந்துவிட்டு சென்றுள்ளனர்.

இதனால் அந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசி வருவதுடன், சுகாதாரச் சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

அந்தப் பகுதிக்கு அருகில் சிறுவர் பூங்கா மற்றும் ஆலயம் அமைந்திருப்பதால் அதிகமான பொதுமக்கள் சென்றுவரும் இடமாக அது காணப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வாறான நாசகார செயலை செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டு கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு; 9 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

2018 ஆம் ஆண்டில் மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு சம்பவத்துடன் தொடர்புடைய 17 பேர் தொடர்பான விசாரணைக்காக நீதிமன்ற அமர்வை நியமிக்குமாறு சட்டமா அதிபர் டப்புலா டி லிவேரா தலைமை நீதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக கேகாலை மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளரும், சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முக்கிய குற்றவாளிகளாக நௌபர் மௌலவி, இப்ராஹிம் மௌலவி, மொஹமட் சாஜித், மொஹமட் சாஹித், சாதிக் அப்துல்லா, சைனுல் அப்தீன், மொஹமட் மில்ஹான் மற்றும் 9 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

வன்முறையை ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டியமை, மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலைகளை உடைப்பதன் மூலம் சமூகங்களிடையே ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு முயற்சித்தனர் என அவர்கள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# 27 பொருள்களின் விலை நிர்ணயம் அடுத்த 3 மாதத்துக்கும் தொடரும்

## வர்த்தக அமைச்சு அறிவிப்பு

27 அத்தியாவசியப் பொருள்களின் விலையின் நிர்ணயத்தன்மையை 3 மாத காலத்துக்குத் தொடர்ந்து பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 27 அத்தியாவசியப் பொருள்களுக்கு மேலதிகமாக ஒரு சில அத்தியாவசியப் பொருள்களின் நிர்ணய விலையை நிலையாகப் பேணவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

அத்தியாவசியப் உணவுப் பொருள்களின் விலைகளின் நிர்ணயத் தன்மையைப் பேண உற்பத்தியாளர்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மூன்று மாத காலத்துக்கு நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 27 அத்தியாவசிய உணவு பொருள்களின் விலையின் நிர்ணயத் தன்மையை பேணுவது அரசாங்கத்தின் இலக்காகும்.

27 அத்தியாவசியப் பொருள்களுக்கு மேலதிகமாகப் பயறு, உணவிற்கு பயன்படுத்தும் அனைத்து சரக்கு பொருள்கள், கௌபி, உழுந்து, வெள்ளை பூண்டு,தேங்காய் எண்ணெய்,சோயா,பேரீச்சம்பழம், பிஸ்கெட், பட்டர், நூடில்ஸ் உள்ளிட்ட பொருள்களின் விலைகளின் நிர்ணயத் தன்மையை 3 மாத காலத்துக்குத் தொடர்ந்து பேணத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் உற்பத்தியாளர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தங்களின் யோசனைகளை வர்த்தகத்துறை அமைச்சுக்கு முன்வைக்க முடியும். 28 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற யோசனைகள் பரிசீலனை செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா
(தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,யாழ். பல்கலைக்கழகம்

# இன்று சர்வதேச புவி தினம்

# எங்கள் பூமியை மீட்டெடுங்கள்!

இயற்கையில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வும் ஏதோ ஓர் இயற்கை நியதிக்கு உட்பட்டு செயற்படும் தன்மை கொண்டதாகும்.

இயற்கையாகவே புவிமேற்பரப்பில் பல்வேறு வகையான தாவர, விலங்கு உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. பரிமாணம் அடைந்த மனிதனின் நாளாந்த நடவடிக்கைகளால் நிலக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம், உயிர்க்கோளம் என்பன பாதிக்கப்பட்டு வருகின்றன. இதில் உயிர்க்கோளமானது உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி, பரிணாமம், பெருக்கம் என்பவற்றுடன் சூழல் மாற்றங்களின் பிரதிபலிப்பாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மனிதர்களின் அலட்சியப்போக்குக் காரணமாக புவி தன் சமநிலையை இழந்து செல்கின்றது. பூமி நலமாக இருந்தால் மட்டுமே நாம் சிறப்பாக வாழ முடியும். பூமி வெப்பமாதலுக்கு, காடுகள் அழிவடைவது மிகமுக்கியமான காரணமாகும். தட்ப வெப்ப நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் மக்கள்



பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரங்களால் பூமி வெப்பமாகின்றது. பூமிக்கு மனிதனால் ஏற்படும் அழிவுகளால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதன் காரணமாக சத்துணவு கிடைக்காமல் கர்ப்பிணிகள், குழந்தைகள் என அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். இந்த வகையில் பூமித்தாயை காப்பாற்ற வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உள்ளது.

### சர்வதேச புவி தினம் என்றால் என்ன?

சர்வதேச புவி தினம் என்பது ஆண்டுதோறும் ஏப்ரல் 22 ஆம் திகதி பூமியின் சுற்றுச் சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கோடு அனைத்து நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒரு சிறப்பு நிகழ்வாகும். பூமியைப் பாதுகாக்கும் வகையில் இன்று சர்வதேச பூமி தினம் கொண்டாடப்படுகின்றது.

### இன்று சர்வதேச புவிதினம்

உலகளாவிய ரீதியில் புவியின் சூழல் மாசடைவதைக் கருத்திற் கொண்டு முதன் முதல் ஐக்கிய அமெரிக்காவில் சுற்றுச் சூழலியல் நிபுணரும் செனட்டருமான கோலோர்ட் நெல்சன் என்பவர் சுற்றுச் சூழல் பற்றிய அறிவைப் பரப்பத் தகுந்த நாளாக 1970ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதியைத் தேர்ந்தெடுத்து உலக மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பை ஏற்று 2 கோடி மக்கள் இந் நிகழ்வில் பங்கெடுத்தார்கள். அன்றிலிருந்து ஆண்டு தோறும் ஒவ்வொரு தொனிப் பொருளை (Theme) மையமாகக் கொண்டு இந்நாள் உலகளாவிய ரீதியில் சர்வதேச பூமி தினமாக கடைப்பிடிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த வருடம் (2021) 'எங்கள் பூமியை மீட்டெடுங்கள்' ("RESTOREOUREARTH")என்னும்தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச புவி தினம் கொண்டாடப்படுகின்றது.

'சர்வதேச பூமி தினம் 2020' என்பது பூமி தினத்தின் ஐம்பதாவது ஆண்டு விழாவாகும். கொவிட் – 19 தொற்று நோயினால் அணிவகுப்புக்கள் மற்றும் கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டதால் டிஜிற்றல் முறையில் நூற்றுக் கணக்கான மில்லியன் மக்களை இணைத்து வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்நிலை (online) அணித்திரட்டல் என்று குறிப்பிடும் அளவிற்கு புவிதினத்தின் ஐம்பதாவது ஆண்டு விழாவை 192 நாடுகளில் மக்கள் கொண்டாடினர்.

இயற்கையை விட்டு விலகி மனிதன் வாழ்ந்து வருகின்றான். இதனால் தனது வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றான். வருங்கால சந்ததியினரை கருத்தில் கொண்டு பூமியைக் காப்பாற்ற வேண்டும். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பன மனித வாழ்க்கைக்காக இறைவனால் வழங்கப்பட்ட நன்கொடையாகும். புவியை அலங்கரித்துள்ள கடல், நதி, நீர்வீழ்ச்சிகள், காடுகள், கழனிகள், மலைகள் பள்ளத்தாக்குகள் அனைத்தும் மனித வாழ்க்கைக்கு அத்தியவசியமானவை. வானம், பூமி, வளிமண்டலம், சூரியனின் ஒளி (வெப்பம்), சந்திரனின் குளிர்ச்சி, தரைவாழ் – கடல்வாழ் உயிரினங்கள், பறவைகள் அனைத்தும் இயற்கையின் அணிகலன்கள். மனிதன் வாழ்க்கையை நடத்துவதற்கு அத்தனையும் தேவையானவை. இந்த சுற்றாடல் தொகுதி புவியின் சமநிலையைப் பேணி வருகின்றது. இச்சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் புவியின் தன்மையை மாற்றி விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடும். ஒவ்வொரு ஆண்டும் சுற்றுச் சூழல் மாசுபாடு, மழையின்மை, பூமி வெப்பமடைதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இது மனித வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. உலகத்திற்கே உணவளித்து, உயிர் காக்கும் ஆதி தொழிலான விவசாயமும், அது சார்ந்த கால்நடை வளர்ப்புத் தொழில்களும் அழிந்து வருகின்றன. அதனைத் தடுக்க உலகம் முழுவதும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நல நிறுவனமான யுனிசெவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

உலகில் ஒவ்வொருநாளும் 700க்கும் மேற்பட்ட சிறார்கள் இறக்கின்றனர். எதிர்வரும் 2040ஆம் ஆண்டிற்குள் ஒரு வயதிற்கு உட்பட்ட ஒரு கோடியே எழுபது லட்சம் குழந்தைகள் தீவிர மாசுகேடு உள்ள பிரதேசத்தில் வாழ்வார்கள். உலகம் முழுவதும் ஏறத்தாழ பத்து லட்சம் குழந்தைகள் பிறந்த நாளன்றே இறக்கின்றனர். பதினாறு லட்சம் குழந்தைகள் பிறந்த ஒருமாதத்திற்குள் இறக்கின்றனர். – என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாகரிக வளர்ச்சியாலும் பொருளாதார தேவையின் பொருட்டும் மனிதன் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்து நகரப் பகுதிக்கு வந்தான். காலமாற்றத்திலும், குடும்பச் சூழலிலும் இயற்கையுடனான அவனது உறவில் விரிசல் ஏற்பட்டது. ஒரு தனிநபரின் பொருளாதார வளர்ச்சிக்காக இயற்கையைச் சிதைத்தல் தடுக்கப்பட வேண்டும். இயந்திரமயமாதலும், புகையும், இரைச்சலும் சிட்டுக் குருவிகள், பூச்சிகளை மட்டுமல்ல நம்மையும் பாதித்து வருகின்றன.

காடுகள் மழையைத் தருவதுடன் மண்ணரிப்பைத் தடுக்கின்றன. பூமி மத்திய கோட்டுப் பகுதியில் தன் மீது போர்த்தி பார்க்கும் பச்சைக் கம்பளம்தான் இந்த எழில் கொஞ்சும் இயற்கைக் காடுகள். குறிப்பாக அயன மண்டல மழைக்காடுகளைக் குறிப்பிடலாம். இந்த மழைக் காடுகளைதேசத்தின்மிகக்குறுகியபரப்பில்கொண்டிருக்கும் நாடுகள் மீது ஏனைய நாடுகள் பொறாமை கொள்ளும் அளவிற்கு மழைக் காடுகள் இயற்கையின் கொடைகளாக இருக்கின்றன. இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, பிரேஸில், கொலம்பியா, பொலிவியா, பேரு, வெனிசுவெலா, மலேசியா என்று விரல்விட்டு எண்ணக்கூடிய சில வெப்ப மண்டல நாடுகளிலேயே மழைக் காடுகளைக் காணமுடிகின்றது. இருந்தும் இப் பூமியின் ஒட்டு மொத்த உயிரின வகைகளில் பாதியளவு சூரியன் நுழையவே தயங்கும் அடர்ந்த இந்தக் காடுகளில்த்தான் இராஜங்கம் செய்கின்றன. அதிலும் இவற்றில் பெரும்பாலானவை உலகில் வேறு எந்தப் பகுதிகளிலும் காணமுடியாத அளவிற்கு இந்த நாடுகளுக்கு மட்டுமே சொந்தக்காரர்களாக இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் மலேரியா நோய்க்குரிய ஒரே ஒரு தீர்வாக இருந்த 'குயினைன்' பெறப்பட்ட தென் அமெரிக்காவின் 'சிங்கோனா' மரம் தொடங்கி குருதிப்புற்று நோய்க்கு மருந்தாகும் மடகாஸ்கரின் பட்டிப்பூ ஊடாக இன்னமும் மனிதனை வதைத்துக் கொண்டிருக்கும் உயிர்க்கொல்லி நோய்களுக்கு மருந்தாகக் கண்டறியப்பட வேண்டிய ஏராளமான தாவரங்கள் வரையில் கொண்டிருக்கும் முழு உலகிற்குமான 'மருத்துவ அலுமாரியாக' இயற்கை, மழைக்காடுகளையே உருவாக்கி இருக்கின்றது. புற்று நோய்க்கு எதிரானவை என அடையாளம் காணப்பட்ட மூவாயிரத்திற்கும் அதிகமான மூலிகைகளில் எழுபது சதவீதம் வரை இந்தக் காடுகளிலேயே காணப்படுகின்றன.

உலகம் பூராகவும் உள்ள மழைக் காடுகளில் ஆயிரத்துக்கும் அதிகமான இனக் குழுமங்களாக 140 மில்லியன் (14 கோடி) பழங்குடியினர் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் கலாசாரமும் வாழ்க்கை முறையும் மழைக் காடுகளின் நிலைத்திருத்தலில் வசிக்கும் பங்கு பிரதானமானது. ஏராளமான இரகசியங்களை பொத்தி வைத்திருக்கும் மழைக் காட்டின் 'சாவி' காடுகளின் பாதுகாவலர்களாகிய இந்த பழங்குடியினரின் கையிலேயே தான் இருக்கிறது. பல நூற்றாண்டு காலப்பட்டறிவின் ஊடாக இவர்கள் தேர்வு செய்து பயன்படுத்தும் மழைக் காட்டுத் தாவர, விலங்கினங்களே புதிய ரக இனங்களாக வெளியுலகிற்கு ஆராய்ச்சியாளர்களால் அறிமுகம் செய்யப்படுகின்றன. தாய்லாந்து 'லுஆ' (LUA) பழங்குடியினர் மாத்திரமே 75 வீதமான உணவுப் பயிர் வகைகளையும் 25 வகையான மூலிகைகளையும் இனங்கண்டு பயிரிடுகிறார்கள் என்றால் உலகம் முழுவதும் உள்ள மழைக்காட்டுப் பழங்குடிகளிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய மரபணு வளங்களை கற்பனை செய்ய இயலாது.

ஆண்டுக்கு 120 – 235 அங்குலம் வரையும் மழை வீழ்ச்சியைப் பெறும் மழைக் காடுகள் நீர்ச்சுழற்சியில் பங்கேற்பதன் மூலம் பூமியின் தட்பவெப்ப நிலையைத் தீர்மானிப்பதில் பிரதான பங்களிப்பினைச் செய்கின்றன. மழைக் காடுகளிற்கு வெளியே பூமியின் பிறபகுதிகளில் உள்ள உயிரினங்களின் தொடர்ச்சியான இருத்தலுக்கும் இன்றியமையாத ஒரு காட்டுத் தொடர்தான் இந்த மழைக் காடுகள். ஆனால் இவ்வளவு இருந்தும் மழைக் காடுகள் படிப்படியாக சிதைவுபட்டுக் கொண்டிருக்கும் சூழலியல் படுகொலை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் மனிதன் படிப்படியாக இயற்கையை அழித்துக் கொண்டிருக்கிறான். நூறு ஆண்டுகளிற்கு முன்னர் பூமியின் நிலப்பரப்பில் 12 சதவீதத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த அயன மண்டல மழைக் காடுகள் இன்று வெறும் 5 சதவீதம் எனக் கூறும் அளவிற்குக் குறுகிப் போயிருக்கிறது. நிமிடமொன்றிற்கு 50 – 100 ஏக்கர் பரப்பளவுள்ள காடுகள் அழிக்கப்படுவதாக செய்தித் தகவல் தெரிவிக்கின்றன. எனவே இயற்கை, மனிதனின் கொடூரப் பிடிக்குள் சிக்கி படிப்படியாக அழிந்து கொண்டே வருகிறது. இயற்கையை அழிப்பதனால் அழிக்கப்படுவது ஆயிரக் கணக்கான தாவர, விலங்கின வகைகளும் ஈடுசெய்யப்பட முடியாத பாரம்பரியப் பொருளுமே தவிர வறுமை ஒழிப்பல்ல.

**நாகரிக வளர்ச்சியாலும் பொருளாதார தேவையின் பொருட்டும் மனிதன் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்து நகரப் பகுதிக்கு வந்தான். கால மாற்றத்திலும், குடும்பச் சூழலிலும் இயற்கையுடனான அவனது உறவில் விரிசல் ஏற்பட்டது.**

மாறாகப் பூமி சந்தித்தது கோரப் புயல்களும் இயற்கையோடு ஒட்டிய வகையில் பஞ்சம், பட்டினி என்று பொசுக்கிக் கொண்டிருக்கும் கடும் வரட்சி போன்றனவையுமே. அதாவது இயற்கையை அழிப்பதனால் புவிச் சமநிலை குலைவுகள் தான் ஏற்படுகின்றன.

அமிலப் படிவுகள் மண்ணின் வளத்தை நச்சாக்கி விடுகின்றது. கைத்தொழில் வாயுக்கள் வளிமண்டலத்தைக் குறிப்பாக ஓசோன் படலத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் புவி உஷ்ணமடைவதுடன் சூழலையும் பாதிக்கின்றது. சுற்றாடல் மாசடைவதைத் தவிர்ப்பதன் மூலம் புவியை நாம் பாதுகாக்க முடியும். திட்டமிடாத காடழிப்பு, மண்ணகழ்வு விவசாயத்தில் அளவுக்கதிகமாக நச்சுத்திரவத்தை பயன்படுத்தல், இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தல், தொழிற்சாலைக் கழிவுகளையும், வீட்டுக் கழிவுகளையும் பாதுகாப்பாக அகற்றாமை ஆகிய செயற்பாடுகளால் சூழல் மாசடைகிறது. மனிதன் சூழலைப் பாதுகாப்பதன் அக்கறையுடன் இருந்தால் மட்டுமே இத்தகைய ஆபத்துக்களில் இருந்து புவியைப் பாதுகாக்கலாம். இது தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிய வேண்டும். அவ்வாறு இல்லாமல் எத்தகைய கோசங்கள் இடுவதாலும், எத்தகைய பயனும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

எனவே இயற்கையைப் பாதுகாப்பதற்கு தொழில்ரீதியான உற்பத்தியைக் குறைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் மாசுபடுத்தாத வழிகளைப் பயன்படுத்த வேண்டும். அதனால் இயற்கைப் பாதுகாப்புடன் மனித தேவையும் பூர்த்தியாகும். மனிதனும் இயற்கையும் சீரான இடைவெளியில் ஒரு ரயில் தண்டவாளம் போல இணைந்திருப்பதுதான் சமூகத்திற்கும் நமக்கும் நல்லது. இயற்கையைப் பாதுகாத்து நாட்டைக் காப்பதுடன் நாமும் இனிமையாக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் உறவுகளை நினைவுகூர்வதற்கு அரசு வழிவிட்டு பாதுகாப்பு வழங்கவேண்டும்

## மட்டு மேயர் சரவணபவன் கோரிக்கை




உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களை நினைவுகூருவதற்கு பொலிஸார்,படையினர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். இதனை நாங்கள் வரவேற்கின்றோம். இதன்போன்று தமிழர்கள் தங்கள் உறவுகளை நினைவுகூருவதற்கு அரசாங்கம் வழிவிடவேண்டும் என மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

இலங்கையை உலுக்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று இன்றுடன் இரண்டு வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இந்த தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று (புதன்கிழமை) காலை நடைபெற்றன.

மட்டக்களப்பு நகரில் மட்டக்களப்பு மாநகரசபையால் நிர்மாணிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு படுகொலை நினைவுத்தூபியில் நேற்றுக் காலை விசேட நிகழ்வு நடைபெற்றது.

உயிர்த்த ஞாயிறு படுகொலை நடைபெற்ற நேரத்தில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு மெழுகுதிரி ஏற்றப்பட்டு உயிர்நீர்த்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நினைவுத்தூபியில் உயிர்நீர்த்தவர்களின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதில் ஜனாதிபதி காட்டிவரும் தீவிரமான செயற்பாடுகளைப் பாராட்டுகிறேன் என இங்கு கருத்துத்தெரிவித்த பிரதி முதல்வர் க.சத்தியசீலன் தெரிவித்தார்.

## உயிர்த்த ஞாயிறு நினைவேந்தல் யாழில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது







ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றன.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று தேவாலயங்கள், நட்சத்திர விடுதிகளில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பில் 39 வெளிநாட்டவர்கள் உட்பட சுமார் 250 இற்கும் மேற்பட்டோரின் உயிர்கள் காவு கொள்ளப் பட்டன. 500 இற்கும் மேற்பட்டவர்கள் அவயங்களை இழந்து குடும்பத்தை இழந்தனர்.

அன்றைய தினம் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாட்டின் பல பாகங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வந்தமையுடன், தேவாலயங்களில் சிறப்பு ஆராதனைகளும் இடம்பெற்றன.

யாழ். மரியன்னை தேவாலயத்தில் காலை 8.45 மணி அளவில் தேவாலய மணி ஒலிக்கப்பட்டு, மௌன அஞ்சலிகள் செலுத்தப்பட்டு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு சிறப்பு ஆராதனைகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 30 நொடிகளில் கொவிட் வைரஸை கண்டுபிடிக்கலாம் இலங்கை விஞ்ஞானி தலைமையிலான குழு சாதனை

30 நொடிகளுக்குள் கொவிட் வைரஸ் தொற்றைக் கண்டுபிடிக்கக் கூடிய பரிசோதனை ஒன்றை இலங்கை விஞ்ஞானிகள் உட்பட குழுவினர் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் நிவ் மெக்சிகோ பிராந்தியத்தில் பணியாற்றும் இலங்கை விஞ்ஞா னிகள் உட்பட குழுவினர் இந்தப் பரிசோத னையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த பரிசோதனை குழுவின் பிரதானியாக இலங்கை விஞ்ஞானியான துவினி தினுஷிக்கா ராஜபக்ஷ செயற்பட்டுள்ளார்.

பொதுவாக பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொண்ட பின்னர் முடிவுகள் பெறுவதற்கு இரண்டு நாள்களாகின்றது. புதிய முறையின் மூலம் 30 நொடிகளில் முடிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளளது.

இந்த முறையில் பலூன் ஒன்றை ஊதி அதில் சுவாசித்த காற்றை கொண்டு பரிசோதனை மேற்கொள்ளப்படும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குலில் உயிரிழந்த மக்களை நினைந்து மலையகத்திலும் ஆன்மீக வழிபாடுகள்

கொழும்பு, ஏப்.22

இலங்கையில் 2019ஆம் வருடம் இடம்பெற்ற தற்கொலை குண்டுதாக்குதல்களில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையில் மலையகத்திலும் நேற்று (புதன்கிழமை) ஆன்மீக வழிபாடுகள் நடைபெற்றன.

காலை 8.45 மணிக்கு தேவாலயங்களில் மணியோசை எழுப்பி வழிபாடுகளில் ஈடுபடுமாறும், வீடுகளில் விளக்கேற்றி இருநிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்திருந்தார். ஏனைய மதத்தவர்களிடமும் அவர் இவ்வேண்டுகோளை முன்வைத்திருந்தார்.

இதன்படி மலையகத்திலுள்ள தேவாலயங்களில் இன்று விசேட ஆராதனைகள் நடைபெற்றன.

அத்துடன், தேவாலயங்கள், கோவில்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள் ஆகியவற்றிலும் உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி வழிபாடுகள் இடம்பெற்றன.

அந்தவகையில், ஹற்றனில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையில் அருட்தந்தை தேவதாசன் செங்கன் தலைமையில் இருநிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி, மெழுகுவர்த்தி ஏற்றி உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்தனர்.

மிகவும் பாதுகாப்பான முறையில் சமூக இடைவெளியைப் பின்பற்றியே வழிபாடுகள் இடம்பெற்றன. ஒரு சிலரே பங்கேற்றிருந்தனர். அதேபோல் பெரும்பாலான மக்கள் வீடுகளில் விளக்கேற்றி இருநிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி, உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்தனர்.

கடந்த 2019 ஆம் வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 277 பேர் உடல்சிதறிப் பலியானார்கள். 477 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அஜித் நிவாட் கப்ரல், பி.பீ.ஜயசுந்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

23 பில்லியன் ரூபா அரச நிதியை, கடந்த 2014 ஆம் ஆண்டு முறையற்ற விதத்தில் பயன்படுத்தியுள்ளனர் எனத் தெரிவித்து, நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரல், ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர உள்ளிட்ட 6 பேரை பிரதிவாதிகளாகப் பெயரிட்டு உயர் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரலுக்கும், ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தரவுக்கும் எதிராக நிதி முறைகேடு தொடர்பில் உடனடியாக சட்டத்தை அமுல் செய்ய சட்ட மா அதிபருக்கு உத்தரவிடுமாறு கோரியே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகேகொடை, நாலந்தாராமையின் விகாராதிபதி தீனியாவல பாலித்த தேரரினால் இந்த மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனுவில் பிரதிவாதிகளாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரல், ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலர் எஸ்.ஆர். ஆட்டிகல, மத்தியவங்கி ஆளுநர், மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு, தற்போதைய இராஜாங்க அமைச்சரான அஜித் நிவாட் கப்ரல் அமைச்சரவையின் அனுமதி, அரசின் அனுமதி இன்றி, இலங்கையின் நன் மதிப்பை அதிகரிக்கவெனக் கூறி , சி.ஐ.ஏ. பிரதிநிதியான இமாட் ஷா சுபேரி என்பவருக்கு 65 லட்சம் அமரிக்க டொலர்களை செலுத்தியுள்ளார் என மனுதாரரான தீனியாவல பாலித்த தேரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைவிட ஹெஜின் ஒப்பந்தம் ஊடாகவும் இலங்கைக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தினார் என அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு உள்ளது என மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தரவுக்கும் பல்வேறு நிதி முறைக்கேடுகள் தொடர்பில் குற்றச்சாட்டு உள்ளது எனவும், அவருக்கு எதிராக நாடாளுமன்ற கோப் குழு ஊடாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் கூறியுள்ளார்.

அத்துடன், பி.பீ. ஜயசுந்தர அரச பதவிகளை வகிக்க முடியாது என உயர் நீதிமன்றம் இதற்கு முன்னர் அளித்த தீர்ப்பினையும் மனுதாரர் ஞாபகப்படுத்தியுள்ளார்.

## 24 மணி நேரத்தில் விபத்தில் அறுவர் பலி

கொழும்பு, ஏப். 22

24 மணிநேரத்தில் வீதி விபத்துக்களுடன் தொடர்புடைய 6 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என பொலிஸார் நேற்று புதன்கிழமை காலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூவர் மோட்டார் சைக்கிள் சாரதிகள் எனவும், மற்றைய மூவர் பாதசாரிகள் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண குறிப்பிட்டுள்ளார்.

வாகன விபத்துகளின் விளைவாக ஏப்ரல் 13 முதல் இதுவரை 75 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதுடன், சுமார் ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை மதுபோதை மற்றும் பொறுப்பற்ற ரீதியில் வாகனம் செலுத்துவோரை அடையாளம் காண பொலிஸார் சிறப்பு நடவடிக்கை எடுத்து வருவதுடன், வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொது மக்களின் உதவியையும் நாடியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இஸ்லாமிய பயங்கரவாதிகள் நடமாடுகின்றனர் என்று தெரிவித்த அருட்தந்தையிடமும் விசாரணை வேண்டும்

## எச்.எம்.எம்.ஹரீஸ் கோரிக்கை



இஸ்லாமிய பயங்கரவாதிகள் 350 பேர் நடமாடுகின்றனர் எனத் தெரிவித்து மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி இருக்கும் அருட்தந்தை சிறில் காமினியிடம் விசாரணை நடத்தப்படவேண்டும். அதுதொடர்பான உண்மைத் தன்மையை குற்றப்புலனாய்வுப் பிரிவு வெளிப்படுத்தவேண்டும் என எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியாக இருந்த சக்திகள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. அதுதொடர்பாகவே அனைவரும் கதைத்து வருகின்றனர். தாக்குதல் இடம்பெற்று இரண்டாவது வருடம் அனுஷ்டிக்கப்படும் நிலையில் தாக்குதலில் பாதிக்கப்பட்ட, உயிரிழந்த கத்தோலிக்க மக்களுக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம். இதுதொடர்பான விசாரணைகளை முறையாக மேற்கொண்டு இதன் பின்னணியில் இருப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனையை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே முஸ்லிம் சமூகம் இருக்கின்றது.

அத்துடன் சஹ்ரான் மற்றும் அவரது கும்பல் மேற்கொண்ட இந்த நாசகார செயல் காரணமாக முஸ்லிம் சமூகம் பாரிய பீதிக்கு ஆளாகி இருக்கின்றது. இந்தத் தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்தவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர். திடீர் கைதுகளுக்கு ஆளாகின்றனர். அதனால் தொடர்ந்தும் இதனை இழுத்தடிக்காமல் முறையான விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

மேலும் நாட்டில் ஒவ்வொரு மதத்திலும் கொள்கைகள் ஜாதி பிரிவுகள் இருக்கின்றன. அதேபோன்று முஸ்லிம் சமூகத்தில் பல கொள்கைப் பிரிவுகள் இருக்கின்றன. அந்த கொள்கைகள் இன்று பயங்கரவாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன. தௌஹீத் கொள்கையுடைய அமைப்புகள் எமது நாட்டில் செயற்பட்டு வருகின்றன. அவர்கள் மார்க்க ரீதியில் கொள்கை அடிப்படையில் செயற்பட்டு வருகின்றார்களே தவிர, அவர்கள் ஒருபோதும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்ற, பயங்கரவாதத்துக்கு நிதி வழங்குகின்ற அமைப்புகளாகச் செயற்படவில்லை.

மேலும் இவ்வாறான 11 இஸ்லாமிய அமைப்புகளை எந்த விசாரணையும் இல்லாமல் அரசாங்கம் தடைசெய்திருக்கின்றது. அந்த அமைப்புகளில் சில அமைப்புகள் இந்த நாட்டில் 70 ஆண்டுகளுக்கும் அதிக காலங்களாகப் பல்வேறு சமூக நடவடிக்கைகளிலும் ஏழை மக்களுக்கு வீடுகளைக்கட்டிக்கொடுத்தும் கல்விக்கான உதவிகளையும் செய்து வந்திருக்கின்றன. எந்த விசாரணையும் இல்லாமல் இவ்வாறான முஸ்லிம் அமைப்புகளைத் தடைசெய்திருக்கின்றமை தொடர்பாகக் கவலையடைகின்றோம். அதனால் ஆளும் தரப்பில் இருக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுடனாவது இதுதொடர்பாகக் கலந்துரையாடி அந்த அமைப்புகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கவேண்டும். அத்துடன் நாட்டில் 350 இஸ்லாமிய பயங்கரவாதிகள் நடமாடுகின்றனர் என அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்திருக்கின்றார். அவரின் இந்த பேச்சு ஒரு பீதியை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. அதனால் குற்றப்புலனாய்வுப் பிரிவு இதுதொடர்பாக அவரை விசாரித்து இதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தவேண்டும். - என்றார்.

# ஒரு லட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க முயற்சி என்கின்றார் நாமல்

இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 59 விளையாட்டு வீரர்கள் தொழில் ரீதியில் ஒப்பந்தங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹேல ஜெயவர்தன தலைமையிலான தேசிய விளையாட்டு பேரவையின் மூலம் தேசிய விளையாட்டு துறையை மேம்படுத்துவதற்கான திட்டம் சமர்பிக்கப்பட்டிருக்கின்றது என நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.



நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவின் கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 6 பேருக்கு இரத்த உறைவு அதில் மூன்று பேர் மரணம்

## சுகாதார அமைச்சர் அதிர்ச்சித் தகவல்



இலங்கையில் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனிகா தடுப்பூசியை செலுத்திக்கொண்ட 6 பேருக்கு இதுவரை இரத்த உறைவு ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், இவ்வாறு இரத்த உறைவு ஏற்பட்டவர்களில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்த விடயத்தை தெரிவித்தார்.

இலங்கையில் இதுவரை 9 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# பண மோசடிக்காரருக்கு பாதுகாப்பான புகலிடமாகத் துறைமுக நகரம் மாறும்

## என்கிறார் விஜேதாஸ ராஜபக்ஷ



கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைய யோசனை நடைமுறைக்கு வந்தவுடன், கொழும்பு துறைமுக நகரம் பணமோசடி நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பான புகலிடமாக மாறும் என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைய யோசனையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தனது வாய்வழி சமர்ப்பிப்பை மேற்கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில் -

இந்த யோசனை இலங்கையின் வளர்ச்சிக்காக அல்ல, அது குறிப்பிட்ட மண்டலத்தின் அபிவிருத்திக்கு மட்டுமே உதவும். எதிர்காலத்தில் ஒரு தனி மாநிலமாக நிர்வகிக்கப்படும்.

இந்த யோசனையின் மூலம் புதிய சட்டமன்ற ஆட்சி, வரி விலக்கு மற்றும் ஒரு வெளிநாட்டு நிதி மையமாக இருக்க அனுமதி கிடைக்கும். இது பணமோசடி நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பான புகலிடமாக இருக்கும்.

கொழும்புத்துறைமுக நகரத் திட்டத்தைச் செயற்படுத்தும் சீன நிறுவனத்தை அமெரிக்கா ஏற்கனவே தடுப்புப் பட்டியலில் பதிவு செய்துள்ளது. எனவே இந்த நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் முழுத் திட்டமும் நாட்டின் கடனை இரட்டிப்பாக்கும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

யோசனையின்படி குறித்த நிலப்பகுதியில் இலங்கை நாணயத்துக்குத் தடை விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இது நாடாளுமன்றத்தின் மேலாதிக்கத்தைத் தன்னிச்சையாக மீறுவதும் நாட்டின் அரசமைப்பை மீறுவதும் ஆகும் என்றும் அவர் கூறினார்.

# இலங்கையுடன் இரு தரப்பு உறவை மேம்படுத்த தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா முயற்சி

தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா இலங்கையுடனான இருதரப்பு உறவை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்படி, இரு நாடுகளின் சுற்றுலாத் துறைகளிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


தென்னாபிரிக்காவிற்கான இலங்கையின் புதிய உயர் ஸ்தானிகர் எஸ்.அமரசேகரவை சந்தித்தபோது சிரில் ரமபோசா இந்த கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

எஸ்.அமரசேகர தனது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி சிரில் ரமபோசாவிடம் பிரிட்டோரியாவில் உள்ள செஃபாகோ எம் மக்காத்தோ ஜனாதிபதி விருந்தினர் மாளிகையில் வைத்து வழங்கினார். கடுமையான கொவிட் - 19 சுகாதார நெறிமுறைகளுக்கு அமைய இந்த நிகழ்வு இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.

இலங்கை உயர் ஸ்தானிகரின் நியமனக் கடிதங்களை ஏற்றுக்கொண்ட பின்னர், ஜனாதிபதி ரமபோசா இலங்கைக்கான தனது வருகைகளை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்.

அத்துடன், இரு நாடுகளின் சுற்றுலாத் துறைகளில் சிறப்புக் கவனம் செலுத்தி இருதரப்பு உறவை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்




"Kapruka Ayojana" நிதி உதவியின் கீழ் தென்னங்காணி அபிவிருத்திக்காக கடனினை பெற்றுக் கொள்ளும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு கீழ் குறிப்பிடப்படும் நன்மைகள் கிடைக்கும்.

**கடன் மீளச் செலுத்தற் காலம் 5 வருடங்கள்**

ஒரு வருடத்திற்கு குறையாத கடன் தவணையினை மீளச் செலுத்தும் உதவிக் காலம் (இந்த உதவிக் காலம் விவசாய உபகரணங்கள் மற்றும் இடைப் பயிர்ச் செய்கை நாற்று மேடை கடன் முறைமைக்காக வேறுபடும்.

50% தொடக்கம் 100% வரை வங்கிக்குச் செலுத்தப்படும் வட்டிக்காக வட்டி உதவி மீளளிப்பு பெற்றுத் தரப்படும்.

கடன் எதிர்பார்ப்பாளர்களுக்கு கடனினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான தொழிநுட்ப திட்ட அறிக்கை தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினால் இலவசமாக தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படும்.

தென்னங்காணி அபிவிருத்திக்காக தேவையான தொழிநுட்ப வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் அலுவலர்களினால் இலவசமாக பெற்றுத் தரப்படும்.

பயிர்ச் செய்கையினால் கிடைக்கப்பெறும் விளைச்சலினை சந்தைப்படுத்துவதற்காக தேவையான சந்தை வாய்ப்புத் தகவல்களும் பெற்றுத் தரப்படும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் எஸ்.டி.சிவநாயகம்

- சிவா இராஜஜோதி -

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறைக்கு புது மெருகூட்டி அதனை வளர்த்த இதழியல் கலா மேதை எஸ்.டி.சிவநாயகத்தின் 21ஆவது சிரார்த்த தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

1946 ஆம் ஆண்டில் 'ஐக்கிய தீபம்' எனும் சிற்றிதழின் (சஞ்சிகை) கிழக்கு மாகாண பதிப்பின் ஆசிரியராக, எழுத்துலகில் கால்பதித்த சிவநாயகம் ஐயா 1947ஆம் ஆண்டில் 'உதயம்' எனும் சிற்றிதழை தனது சொந்தச் செலவில் ஆரம்பித்து நடத்தினார்.

1948ஆம் ஆண்டில் தினகரன் நாளிதழில் உதவி ஆசிரியராக இணைந்து, தேசிய ரீதியில் தனது இதழியல் பணியை ஆரம்பிக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

அதன் பின்னர், முதுபெரும் தமிழ்த் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அழைப்புக்கிணங்க, 1950ஆம் ஆண்டின் முற்பகுதியில் 'சுதந்திரன்' வார இதழின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பை ஏற்று, அதனைத் திறம்பட நடத்திப் புகழ் பெற்றார். அதன் பலனாக, 1960ஆம் ஆண்டில் 'வீரகேசரி' நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. 1965ஆம் ஆண்டு வரை சுமார் 5 ஆண்டுகள் வீரகேசரியில் பணியாற்றியிருந்தார்.

அதன் பிறகு, சுயாதீன பத்திரிகை சமாஜத்தில் இணைந்து, 'தினபதி' எனும் நாளிதழையும், 'சிந்தாமணி' எனும் வார இதழையும் புதிதாக உருவாக்கி அவற்றின் பிரதம இதழாசிரியராக இறுதிவரை, (1966 - 1990) அதாவது அந்த ஸ்தாபனம் மூடப்பட்ட காலம்வரை பணியாற்றினார். தினபதி மற்றும் சிந்தாமணி பத்திரிகைகளை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்தமைக்காக, பிரதம இதழாசிரியராக விளங்கிய சிவநாயகம் ஐயாவை அந்தப் பத்திரிகை நிறுவனம் தனது பணிப்பாளர்களில் ஒருவராக நியமித்து கௌரவப்படுத்தியது.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரையில், இதழாசிரியர் ஒருவருக்கு கிடைக்கப்பெற்ற இந்த கௌரவம், வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய ஓர் அம்சமாகும்.

சிந்தாமணி பத்திரிகை மூலம் தமிழ் இலக்கியத்துறைக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஆசிரியர் சிவநாயகம் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இலங்கைக்கு (கணினி மூலம்) அறிமுகமாவதற்கு முன்னரே, அதனை சிந்தாமணி இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக முதல் முதலில் அறிமுகப்படுத்தி, இலங்கை வாசகர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருந்தகை ஆசிரியர் சிவநாயகம் என்பதை தமிழ்கூறும் நல்லுலகம் அறியும்.

1975ஆம் ஆண்டில் அப்போதைய டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகை நிறுவனம் வெளியிட்ட 'ஈழமணி' எனும் நாளிதழில், நீதிமன்ற செய்தியாளராகப் நான் பணியாற்றிய வேளை, சிவநாயகம் ஐயாவை அலுவலக ரீதியாக ஒரு தடவை சந்திக்க நேர்ந்தது. அன்று முதல் அவருடனான தொடர்பை வலுப்படுத்திக் கொண்டேன்.

## உயிர்த்தஞாயிறு தாக்குதலில் உயிர்நீத்தோருக்கு பிரதமர் அலரிமாளிகையில் தீபமேற்றி அஞ்சலி



கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் அலரி மாளிகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதுடன், தீபமேற்றி உயிர் நீத்தோர் அனைவரையும் நினைவுகூர்ந்தார்.

பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த அனைவரையும் நினைவுகூர்ந்து முற்பகல் 8.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பிரதமர், அதனைத் தொடர்ந்து தீபமேற்றி அவர்கள் அனைவரையும் நினைவுகூர்ந்தார். குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமருடன் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

ஈராண்டுகளுக்குமுன்னர்இன்று போன்றதொரு தினத்தில் தீவிரவாத குழுவொன்றால் நிகழ்த்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் 270இற்கும்அதிகமானோர்உயிரிழந்தமையுடன், ஐந்நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர்.

மேலும், தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த அனைத்து அன்புக்குரியவர்களையும் நினைவுகூருவதுடன், உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் தாக்குதலின் போது காயமடைந்த மற்றும் ஊனமுற்றநூற்றுக்கணக்கானோர்உடல், உள ரீதியாகப் பாதிப்படைந்துள்ள நிலையில் அவர்களும் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கின்றேன். இதேவேளை, தாக்குதலில் உயிரிழந்த, ஊனமுற்ற மற்றும் காயமடைந்த அனைவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும்தெரிவித்துக்கொள்கிறேன். - என்றார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இரண்டு வருட நிறைவை முன்னிட்டு வவுனியாவில் வழிபாடு



உயிர்த்தஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இரண்டாவது வருடநினைவுதின நிகழ்வுகள் வவுனியாவில் அமைந்துள்ள குட்செட்வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று (புதன்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி கொழும்பு பிரபல விடுதிகளிலும், தேவாலயங்கள் மீதும் இஸ்லாமிய கடும்போக்காளர்களால் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அந்தத் தாக்குதலில் பலியான மக்களை நினைவுகூர்ந்து, இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காக கருமாரி அம்மன் ஆலயத்தில் விசேடபூஜை வழிபாடுகள் இடம்பெற்றமையுடன், இறந்தவர்களிற்கு ஒளித் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்விருட்சம் சமூக ஆர்வலர்அமைப்பு மற்றும் கருமாரி அம்மன் ஆலய பரிபாலனசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரபாகரக்குருக்கள், சந்திரகுமார் கண்ணன், தமிழருவி த.சிவகுமாரன், நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், கிராமசேவையாளர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## யாழ்.மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தைப் புனரமைத்து சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், அதனைப் புனரமைப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அப்போதைய வடக்கு ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரின் முயற்சியால், நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இயங்கிய 'நாளைய இளைஞர்கள்' அமைப்பின் நிதிப் பங்களிப்பில் இந்த நீச்சல் தடாகம் உருவாக்கப்பட்டது.

சுமார் 2 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக 2013 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்ட நீச்சல் தடாகம், ஆட்சி மாற்றங்களைத் தொடர்ந்துசீராகப்பராமரிக்கப்படாமல்காணப்படுகின்றது.

இதுதொடர்பாக, சமூக ஆர்வலர்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில், அமைச்சரால் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சங்கிலி திருடன் யாழில் மாட்டினான்

யாழில் சங்கிலி திருட்டில்; ஈடுபட்டு வந்த நபர் யாழ் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ்.மணியந்தோட்டப் பகுதியை சேர்ந்த 23 வயதுடைய நபர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை அவருடைய வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்

யாழ் நகரப்பகுதியில் தங்க சங்கிலி திருட்டில் ஈடுபட்டார் என யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் யாழ் நகரப்பகுதியை சேர்ந்த யுவதி ஒருவரால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டின் படியும் சி.சி.ரி.வி பதிவின் படியும் மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து திருடப்பட்ட 2 பவுண் நகையும் மேலதிகமாக திருடப்பட்ட தொலைபேசி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

### ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# நீதி கிடைக்கும் வரை நாம் போராடுவோம்!

## நினைவேந்தல் நிகழ்வில் பேராயர் இடித்துரைப்பு




உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலின் உண்மைகளை வெளிக்கொண்டுவந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் வரை எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும்.

– இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நாளான இன்று நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலின் பின்னணியில் உள்ள அனைத்து உண்மைகளும் வெளிக்கொண்டுவரப்படுவதில் இருந்தே, உயிரிழந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி நிலைநாட்டப்படும்.


இந்தத் தாக்குதலுக்கான நீதியைத் தாமதப்படுத்துவது, முழு நாட்டின் பாதுகாப்பையும் ஆபத்தில் விடுவதற்குச் சமமாகும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி அனுஷ்டிக்கப்படும் நிலையில், தாக்குதல் சம்பவத்துக்கு எதிராக எவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் – என்றார்.

## குற்றவாளிகள் சகலரையும் நீதியின் முன்னிறுத்துவோம்

### நாடாளுமன்றில் பிரதமர் மஹிந்த வாக்குறுதி



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் அதே வேளை, இது போன்ற துரதிர்ஷ்டவசமான சூழ் நிலை இனி எப்போதும் ஏற்படாது தடுக்க ஓர் அரசு என்ற ரீதியில் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அத்துடன், இந்தக் கொடூரத் தாக்குதலுக்கு காரணமான அனைவரையும் நீதியின் முன்னிறுத்த நாம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் கூறிக்கொள்ளவிரும்புகின்றேன்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று இரண்டாம் ஆண்டுநினைவு நாளையொட்டி நாடாளுமன்றத்தில் இன்று பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈராண்டுகளுக்கு முன்னர் அதாவது 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத் தில் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட இருண்ட தினத்தின் ஈராண்டு நிறைவை மிகுந்த அனுதாபத்துடன் இன்று நினைவு கூருகின்றோம்.

அன்று உயிர்த்த ஞாயிறு தின வழி பாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவி மக்கள் உள்ளிட்ட 259 பேர் உயிரிழந்ததுடன் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த அனைத்து அன்புக்குரியவர்களையும் நினைவு கூருவதுடன், உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றேன். அத்து டன் தாக்குதலின்போது காயமடைந்த மற்றும் ஊன முற்ற நூற்றுக்கணக்கானோர் உடல், உள ரீதியாக பாதிப்படைந்துள்ள நிலையில் அவர்களும் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன். இதேவேளை, தாக்குதலில் உயிரிழந்த, ஊனமுற்ற மற்றும் காயமடைந்த அனைவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய தயாரிக்கப்பட்ட அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக இவ்விடயத்தில் நாம் தலையீடு செய்யா விடினும், அச் செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் நல்குவதற்கு அரசு என்ற ரீதியில் தயாராக விருப்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக செயற்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியவற்றின் விசாரணைகளை சுயாதீனமான முறையில் முன்னெடுப்பதற்குத் தேவையான வசதிகளை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அந்த விசாரணைகளின் இறுதியில் அந்தந்த திணைக்களங்களின் ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நாம் நம்புகின்றோம்.

கடந்த அரசால் குற்றங்கள அலட்சியம் செய்யப்பட்டமையாலும், தேசியப் பாதுகாப்பையும், தமது அரசியல் நடவடிக்கைகளையும் குழப்பிக் கொண்டமையாலும் இறுதியில் பாதிக்கப்பட்டது அப்பாவி பொதுமக்களே ஆகும். இன்றும், தாக்கு தலுக்கு காரணமான தரப்புகள் பல்வேறு பொய்களை சமூகத்தில் பரப்பி, விசாரணைகளில் செல்வாக்கு செலுத்துவதன் மூலம் சமூக கவனத்தை திசை திருப்பும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். நாம் அவர்கள் குறித்து வருந்துகின்றோம் – என்றார்.

### ஈஸ்டர் தாக்குதலுக்கு 2 வருடங்கள்

## கிறிஸ்தவ தேவாலயங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள்!



இலங்கையின் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திரக் ஹோட்டல்களை இலக்கு வைத்து, 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இன்றுடன் இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான பிரதான திருப்பலி கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று இடம்பெற்றது.

கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் தலைமையில் கொச்சிக்கடை சென்ட் அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட திருப்பலி ஒப்புகொடுத்தல் மற்றும் ஆராதனை நிகழ்வுகளில் சர்வ மதத் தலைவர்களும் பங்கேற்றனர்.

இதனிடையே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நினைவு கூர்ந்து பாதிக்கப்பட்டவர்க ளுக்கு இன்று காலை 08.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு, நாடு முழுவதும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் திருப்பலி மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று 3 கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள 3 ஹோட்டல்கள் உள்ளிட்ட இடங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 263 பொதுமக்கள் உயிரிழந்ததோடு, 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வழியாக தூத்துக்குடிக்குக் கடத்தப்பட்ட 1000 கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் மீட்பு

(ந.லோகதயாளன்)

இலங்கை வழியாக தூத்துக்குடிக்கு மரக் குற்றிகளை ஏற்றி வந்த கப்பலில் உள்ள சரக்கு பெட்டகம் ஒன்றில் இருந்து 9 கறுப்பு நிற பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரம் கோடி பெறுமதியான கொக்கைன் போதைப்பொருளை நேற்று இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

தூத்துக்குடி சிதம்பரனார் துறைமுகம் வழியே தின சரி பல்லாயிரம் கோடி ரூபா அளவுக்கு வர்த்தகம் நடை பெற்று வருகின்றது.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திலிருந்து அண்டை நாடுகளான இலங்கை, மாலைதீவு, லட்சத்தீவு, சிங்கப்பூர், மலேசியா, சீனா, பனாமா, அமெரிக்கா உள்ளிட்ட இடங்களுக்கும் நேரடி வர்த்தக சரக்கு கப்பல் போக்குவரத்து நடைபெறுகின்றது.

இந்நிலையில், நேற்று தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்துக்கு வந்த சரக்கு கப்பல் ஒன்றில் கண்டெய்னர் மூலமாக கொக்கைன் போதைப்பொருள் கடத்த உள்ளதாக மத்திய வருவாய் புலனாய்வுத் துறைக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதைத்தொடர்ந்து, புலனாய் வுத்துறை அதிகாரிகள், சுங்கத்துறை அதிகாரிகள் இணைந்து சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, பிரேஸிலில் இருந்து இலங்கை வழியாக தூத்துக்குடிக்கு 8 சரக்கு பெட்டகங்களில் மரக் குற்றிகளை ஏற்றி வந்த கப்பல் உள்ளே நிறுத்தப்பட்டிருந்தது.

மரக்குற்றிகள் கொண்டுவரப்படட்ட சரக்கு பெட்டகம் ஒன்றில் 9 கறுப்பு நிற பைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த 9 பைகளில் மொத்தம் 400 கிலோ எடையுள்ள கொக்கைன் போதைப்பொருள் இருப்பது சோதனை யில் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து போதைப் பொருளை பறிமுதல் செய்த அதிகாரிகள், அதை அனுப்பியவர் மற்றும் அதை பெறுபவர் முகவரியை விசாரணை நடத்தினர். ஆனால், அவை போலியான முக வரி என கண்டு பிடிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட கொக்கைன் போதைப் பொருளின் மதிப்பு சர்வதேச அளவில் சுமார் ஆயிரம் ரூபா கோடிக்கும் மேல் இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு விசாரணைக் குழுக்களை அழைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரிக்குக!

## ஜே.சி.அலவத்துவல எம்.பி. கோரிக்கை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோருக்கு இரு வாரங்களுக்குள் நீதியைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறியே தற்போதைய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது.

எனவே, வெளிநாட்டு விசாரணைக் குழுக்களையேனும் நாட்டுக்கு அழைத்து இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் ஆற்ற வேண்டிய பொறுப்புக்கள் உள்ளன.

தாக்குதல்களில் பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் வழங்குவதாகக் கூறியே தற்போதைய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. தேசியப் பாதுகாப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தியே 69 லட்சம் மக்கள் வாக்களித்தனர்.

அதே போன்று நாடாளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப் பெற்றது. எனவே, தற்போதுள்ளதை விடவும் மிகத் துரிதமான முறையில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். பேராயர் உள்ளிட்ட முழு நாட்டு மக்களும் இதனையே எதிர்பார்க்கின்றனர்.

வெளிநாட்டு விசாரணைக் குழுக்களையேனும் நாட்டுக்கு அழைத்து இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். இதுபோன்றதொரு சம்பவம் மீண்டுமொருமுறை இடம்பெறாமல் தடுக்க வேண்டுமெனில் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

இந்தத் தாக்குதல்களுடன் சர்வதேச தொடர்புகளும் காணப்படலாம். இவை தொடர்பில் ஆராய்ந்து முறையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நாட்டு மக்களுக்கு அது பாதுகாப்பற்ற நிலைமையைத் தோற்றுவிக்கும். அமெரிக்காவில் இது போன்றதொரு தாக்குதல் இடம்பெற்ற போது, ஆட்சி மாறிய போதும் தாக்குதலின் சூத்திரதாரிகள் சகலரும் கண்டு பிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் பேராயர் உள்ளிட்ட இந்த தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு சகலருக்கும் காணப்படுகிறது. குறிப்பாக இது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படுகின்ற செயற்பாடுகளால் யாரும் திருப்தியடைய முடியாது. – என்றார்.

# கொழும்புத் துறைமுக நகரத்துக்கு நுழைவதற்கான சீனத் தூதரக அதிகாரம் குறித்து எதிர்க்கட்சி கவலை

கொழும்பு துறைமுக நகரத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வருகைகளை ஏற்பாடு செய்ய கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தின் அதிகாரம் தொடர்பாக எதிர்க்கட்சி கவலை தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கூட்டங்களைத் தொடர்ந்து கொழும்பு துறைமுக நகரத்துக்கு இன்று (வியாழக்கிழமை) கள விஜயம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

எவ்வாறாயினும் சீனாவின் தூதரகம், ஏற்பாடு செய்த இந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வருகைகளை ஏற்பாடு செய்வதற்கான சீனத் தூதரகத்தின் அதிகாரம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா கேள்வியெழுப்பினார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஆராயுமாறு ஹர்ஷன ராஜகருணா சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை கேட்டுக்கொண்டார்.

## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நிலையில் தமிழ் தேசிய இனமான நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகளாக எங்களுக்கான அதிகாரங்களைப் பகிர, ஆகக்குறைந்தது மாகாணசபை அதிகாரங்களை, ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள பிரகாரம் முற்றுமுழுதாக நிறைவேற்றுமாறு கோரிக்கை விடுத்தும் அது மறுக்கப்படுகிறது.

ஒரு தேசிய இனத்தின் கோரிக்கையை நிராகரிக்கும் அரசு, வெளிநாடு ஒன்றுக்கு அதே அதிகாரங்களை வழங்குவது எந்த விதத்தில் நியாயம்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான குருசுவாமி சுரேந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆதிக்குடிகளாக, தேசிய இனமாக எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவும் எமது மக்களை சிறப்பாக நிர்வாகிக்கும் அதிகாரப் பரவலாக்கலாகவும் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து பல வருடங்களாக ஜனநாயக வழியிலும் ஆயுத மூலமும் போராடி ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்துள்ளோம். எமது போராட்டங்கள் கொடூரமாக அடக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட அதே வேளையில் வெளிநாடு ஒன்றுக்கு தாம் பாளத்தில் வைத்து அதே அதிகாரங்களை அரசு கொடுக்க முற்படுவது எதற்காக?

வியாபார ரீதியாக அந்த துறைமுக நகரம் நாட்டுக்கு நிதி சேர்த்துக் கொடுக்கும் என்றால் நாம் கோரும் அதிகாரங்களை எங்களுக்கும் தாருங்கள். இதைவிட சிறந்த முறையிலே நாங்கள் பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைந்து இந்த நாட்டினுடைய பொருளாதாரத்திற்கும் அதிக அளவு வருமானத்தை ஈட்டித் தரும் தேசமாக மாற்றி அமைத்துக் காட்டுகிறோம்.

தனது நாட்டில் தேசிய இனத்துக்கு பல்வேறு காரணங்களை கூறி மறுக்கும் உரிமையை, வெளிநாட்டுக்கு வருமானம் என்ற நியாயப்படுத்தலோடு வழங்குவது எப்படி? இதற்கு அரசு விளக்கம் கொடுத்தே ஆக வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கடுமையான நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய, இந்தத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்றைய மதிப்பாய்வுக் கூட்டத்தின்போது தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் மக்கள் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற தவறியதையடுத்தே நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ளது எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புதிய கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் படி நாள் ஒன்றுக்கு 15 ஆயிரத்துக்கும் அதிகமான பி.சி.ஆர் பரிசோதனைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளன. தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக அபராதங்கள் விதிக்கப்படவுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோருக்கான விசேட தனிமைப்படுத்தல் சட்டம் உடனடியாக அமுல்படுத்தப்படவுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவுகளில் கட்டில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், கொரோனாத் தொற்றாளர்களுக்கு தேவையான ஹை ப்ளோர் ஒட்சிசனை வழங்குதல், தொற்றாளர்களின் தகவல்களைத் திரட்டும் பணிகளை விரைவுபடுத்தல் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு மேலதிக பாதுகாப்பு அங்கிகளை வழங்குதல் ஆகியவை குறித்தும் மதிப்பாய்வுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு நாடளாவிய ரீதியில், மேலும் பல வைத்தியசாலைகளை இனங்காணல் மற்றும் மேம்படுத்தல், கொரோனா நோயாளர்களின் நோய் நிலைமைகளுக்கு ஏற்ப அவர்களை வகைப்படுத்தி பொருத்தமான வைத்தியசாலைகளில் சேர்த்து தேவையான சிகிச்சையை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் அதேவேளை, ஏனைய நோயாளர்களுக்கான சிகிச்சைகளை தடையின்றி வழங்குதல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன – என்றார்.

இதனிடையே, குருநாகல் மாவட்டத்தின் தித்தவல்லேகல கிராம சேவகர் பிரிவு உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று மாலை தெரிவித்தார்.

## மணல் கடத்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாலாவிப் பகுதியில் சுற்றுக் காவலில் ஈடுபட்ட இராணுவத்தினர், அவ்வழியே மணலுடன் வந்த டிரக்டரை மறித்துள்ளனர். இதன்போது குறித்த டிரக்டர் இராணுவத்தினரை மோதித்தள்ள முற்பட்டது.

இதையடுத்து டிரக்டரின் சக்கரங்களுக்கு இராணுவத்தினரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மூன்று சக்கரங்கள் காற்றுப்போன நிலையில் அதில் பயணித்த மூவரும் டிரக்டரை கைவிட்டு விட்டு தப்பியோடியுள்ளனர்.

டிரக்டரைக் கொடிகாமம் பொலிஸார் மீட்டுள்ளனர். குறித்த பகுதியில் தொடர்சியாக சட்ட விரோத மணல் அகழ்வு, மணல் கடத்தல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா உற்பத்திக்கு அனுமதி வழங்குக

## நாடாளுமன்றில் டயானா கமகே ஆலோசனை



எமது மக்கள் நாள் முழுவதும் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை இரவில் செலவுசெய்யும் இடமொன்று இல்லையெனவும், எனவே இரவுபொருளாதாரவேலைத் திட்டமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்தார்.

மதுபானசாலைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் போல் கஞ்சாவிற்கும் அனுமதிப்பத்திரம் வழங்கி ஏற்றுமதிக்கு இடமளிக்க வேண்டும் எனவும் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை, வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான 5 ஒழுங்கு விதிகளும், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு அறிவித்தல்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாடு வெளிநாட்டுக் கடன்களில் இருந்து விடுபட வேண்டும் என்றால், வெளிநாட்டு முதலீடுகளை உருவாக்க வேண்டும் என்றால் தற்போது நாட்டில் மதுபானசாலைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் போல் கஞ்சாவிற்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

அரச அனுசரணையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலைமையை உருவாக்க வேண்டும். அதன் மூலமாகக் கடன்களில் இருந்து விரைவாக மீள முடியும். கஞ்சா வெளிநாடுகளில் முக்கிய பாவனையில் உள்ளது. ஆயுர்வேத பாவனைக்கும் இது அவசியமானது.

எனவே, புதிதாக நாம் சிந்திக்க வேண்டும். அபிவிருத்தி அடைந்த உலகில் அதற்கு ஏற்ப சிந்தித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கஞ்சாவைப் போதைப்பொருள் பட்டியலில் சேர்க்காது அரச அனுசரணையில் இதனை சட்டமாக்கி ஏற்றுமதி செய்ய வேண்டும். பிரதான ஏற்றுமதியாக இதனைக் கருதி அதன் மூலமாக நாட்டின் கடன்களை அடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, பகல் பொருளாதாரம் மாதிரியே இரவு பொருளாதாரக் கொள்கையொன்றை உருவாக்க வேண்டும். எமது நாட்டில் இன்றும் அவ்வாறான திட்டமொன்று இல்லை.

எமது மக்கள் நாள் முழுவதும் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை விடுமுறைக்காலத்தில் செலவுசெய்ய இடமொன்று இல்லை.

எனவே எமது நாட்டுக்கு இரவு பொருளாதார திட்டமொன்று அத்தியாவசியமாகியுள்ளது. சுற்றுலாத்துறையில் முன்னணியில் உள்ள நாடாக நாம் இருக்கின்ற போதிலும் இரவு 11 மணிக்கு பின்னர் மதுபானசாலை திறக்கப்படுவதில்லை. ஆனால் இந்த நிலைமை மாற வேண்டும்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இரவு நேரங்களில் செலவு செய்யவோ, மதுபானங்களைப் பெற்றுக் கொள்ளவோ முடிவதில்லை. சுற்றுலாத்துறையினருக்கும் தமது பணத்தை செலவு செய்ய இடமில்லை.

எனவே நள்ளிரவு ஒரு மணி வரையிலேனும் மதுபானசாலைகளை திறந்து வைக்க வேண்டும். எமது மக்களுக்கும் இது பயனளிக்கும். எனவே, மதுவரிக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை செய்து நான் கூறும் விடயங்களை உள்வாங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்து வரும் மூன்று வாரங்களும் வடக்கில் கொரோனாத் தொற்று அதிகரிக்கும் நிலை

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

எதிர்வரும் மூன்று வாரங்கள் வடக்கில் கொரோனா தொற்று வீதம் அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் மதத்தலைவர்களுக்கும் மாகாண சுகாதார பிரிவினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் அண்மைய நாள்களில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலைமை காணப்படுகின்றது. அதிகரித்த கொரோனாத் தொற்றின் காரணமாக சில பகுதிகளை முடக்க வேண்டி ஏற்பட்டது. கடந்த வாரத்தில் யாழ் மாவட்டத்தில் 5 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 5 இறப்புகள் பதிவாகியுள்ளன.

உண்மையிலே கடந்த வருடத்தில் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தாக்கத்தினால் இறப்புகள் பெரிதாக இடம்பெறவில்லை. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதைவிட இலங்கையில் தற்போது புது வருட கொண்டாட்டங்களின் பிறகு கொரோனாத் தொற்று பரம்பல் மிகத் தீவிரம் அடையலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது.

முக்கியமாக சுகாதார அமைச்சு அது சம்பந்தமாக அச்சத்தை வெளியிட்டிருக்கின்றது. அதன் தாக்கத்தை இந்த மாதக் கடைசி வாரத்திலும் மே மாத முதல் இரண்டு வாரங்களிலும் உணரக்கூடியதாக இருக்கும்.

புத்தாண்டு காலப்பகுதியிலே பொதுமக்கள் வெளி மாவட்டங்களுக்கான பயணங்கள் மேற்கொண்டமை, பொது போக்குவரத்துகளை பயன்படுத்தியமை மற்றும் வணக்கத் தலங்களில் ஒன்று கூடியமை இதன் காரணமாக தொற்றுப் பரவல் அதிகரிப்பு ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது .

இன்னொருபுறம் ஒரு புதிய வைரஸ், கூடிய வீரியம் கொண்ட வைரஸ் ஒன்று இங்கே பரவலாம் எனக் கருதப்படுகின்றது. தற்பொழுது அது சம்பந்தமான ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



அடுத்த சில நாள்களில் அந்த முடிவுகள் தெரியவரும்.

எனவே இந்த சூழ்நிலையிலே உலகத்திலும் ஏனைய நாடுகளிலும் கடந்த சில வாரங்களில் இந்தப் பரம்பல் மிகத் தீவிரம் அடைந்து வருகிறது. குறிப்பாக இந்தியாவில் மிகத் தீவிரமாக பரவுகின்றது. குறிப்பாக நேற்று கூட 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அத்தோடு இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இறப்புக்கள் பதிவாகியுள்ளன.

எனவே இவ்வாறான சூழ்நிலையில் வட மாகாணத்திலும் இந்தப் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

அதன் ஒரு அங்கமாக பொதுமக்கள் மத்தியில் இது பற்றிய சரியான விழிப்புணர்வு இல்லாத ஒரு நிலைமை காணப்படுகின்றது.

அதன் காரணமாக முகக் கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளி பேணுதல், பொது இடங்களில் ஒன்று கூடுதல் போன்ற விடயங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு இன்மையே இதற்குக் காரணமாகும்.

எனவே பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை சரியாக கடைப்பிடிக்க வேண்டும்.

பொதுமக்கள் தொற்றுப் பரம்பல் அதிகரிக்கும் போது ஒரு சில நாள்களுக்கு சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் தொடர்ச்சியாக அதைப் பின்பற்றுவதில்லை.

எனினும் வடமாகாணத்தைப் பொறுத்தவரை பொதுமக்கள் மத்தியில் இந்த கொரோனா பற்றிய சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

மதத்தலைவர்கள் சமூகத்தில் மதிக்கப்படுபவர்கள். எனவே மதத் தலைவர்களின் வார்த்தைகளுக்கு மக்கள் கட்டுப்படுவார்கள். மக்கள் தங்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதன் காரணம் மதத்தலைவர்கள் மூலமாக இந்த கருத்துக்கள் மக்களுக்கு செல்ல வேண்டும் என்பதற்காகவே இன்றைய தினம் இந்த கலந்துரையாடலை மதத்தலைவர்களுடன் இன்று ஏற்பாடு செய்திருந்தோம். – என்றார்.

இந்தச் சந்திப்பில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மத தலைவர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களைப் பணிப்பாளரிடம் தெரிவித்திருந்தனர்.

# வட மாகாணத்தில் இன்னும் 46 ஆயிரம் குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க வேண்டியுள்ளது

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,ஏப்.22

கொவிட் – 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் புதுவருடக் கொண்டாட்டத்தில் ஈடுபடும் வகையில் வழங்குவதாக அரசு அறிவித்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வடக்கு மாகாணத்தில் மட்டும் இன்று வரை 46 ஆயிரத்து 515 குடும்பங்களிற்குகிடைக்கவில்லைஎனச்சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இந்த வகையில் அதிக பட்சமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்களிற்கு 5 ஆயிரம் ரூபா வழங்க அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று வரையில் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 386 குடும்பங்களிற்கு மட்டும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 34 ஆயிரத்து 792 குடும்பங்களிற்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 ஆயிரத்து 58 குடும்பங்களிற்கு தலா 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டது. இங்கே நேற்று வரையில் 31 ஆயிரத்து 544 குடும்பங்களிற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அங்கு இன்னும் 3ஆயிரத்து 514 குடும்பங்களிற்கு அதனை வழங்க வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் 42 ஆயிரத்து 321 குடும்பங்களிற்கு அனுமதிக்கப்பட்டது. இருந்தபோதும் நேற்று வரையில் 37 ஆயிரம் குடும்பங்களிற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இன்னும் 5 ஆயிரத்து 321 குடும்பங்களிற்கு 5 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்திலே 33 ஆயிரத்து 163 குடும்பங்களிற்கு அனுமதிக்கப்பட்டது. இதில் நேற்று வரையில் 30 ஆயிரத்து 395 குடும்பங்களிற்கு அது விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேலும் 2 ஆயிரத்து 768 குடும்பங்களிற்கு 5 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 23 ஆயிரத்து 907 குடும்பங்களிற்கு 5 ஆயிரம் ரூபா அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று வரையில் 23 ஆயிரத்து 788 குடும்பங்களிற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் 119 குடும்பங்களிற்கு மட்டுமே அவ் கொடுப்பனவு வழங்க வேண்டியுள்ளது.

இவற்றின் அடிப்படையில் வடக்கின் 5 மாவட்டங்களிலும் 2 லட்சத்து 82 ஆயிரத்து 627 குடும் பங்களிற்கு அனுமதிக்கப்பட்டதில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 113 குடும்பங்களிற்கானகொடுப்பனவுவழங்கப்பட்டுள்ளது.

# கறுப்புப் பட்டி அணிந்து வராத ஹக்கீம்; நேரடியாக சபையில் சாடினார் தினேஷ்

நாடாளுமன்றத்தில் நேற்று(புதன்கிழமை) ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சபை அமர்வுகள் சுமார் 10 நிமிடங்கள் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

ஈஸ்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், நாடளாவிய ரீதியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்தநிலையில் நேற்று ஆளும் கட்சியினர் கறுப்பு பட்டியணிந்து நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தமையுடன், எதிர்கட்சியினர் கறுப்பு ஆடையணிந்திருந்தனர்.

இதன்போது ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை முன்வைத்திருந்தமையுடன், ஆளும் எதிர்கட்சிக்கு இடையில் மோதல் நிலை ஏற்பட்டிருந்தது.

எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் கருத்துக்களை வெளியிட்டதன் பின்னர், கருத்து வெளியிட்ட சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, ஹக்கீம் கறுப்புப் பட்டி அணியாமை தொடர்பாகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

'உங்களுக்கு வெக்கமாக இல்லையா? நீங்கள் இங்கே எழுந்து நின்று பேசிக்கொண்டு இருக்கின்றீர்கள். நீங்கள் கறுப்புப் பட்டியும் அணியவில்லை. கறுப்பு ஆடை யும் அணியவில்லை.' என தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார்.

# வெளிநாடுகளிலிருந்து 1,363 பேர் நாடு வருகை

வெளிநாடுகளில் இருந்து மேலும் ஆயிரத்து 363 பேர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேற்று (புதன்கிழமை) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 24 விமானங்கள் ஊடாக அவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர். இதற்கமைய கட்டாரில் இருந்து 173 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 232 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அத்துடன் அந்தக் காலப்பகுதியில் நாட்டிலிருந்து ஆயிரத்து 345 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org